391

# கதர் மலர்

## அகில பாரத சர்க்கா சங்கம்

தமிழ் நாட்டுக் கிளையின் வெளியீடு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7-DEC 1946
MADRAS

542

ALL-TMAL
00497

அக்டோபர் 1946

விலை அணு 8

M7K
N46
113712

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| 1. | ராட்டைப் பாட்டு | .... 1 |
| 2. | நூல் நிபந்தனையை வற்புறுத்துவதேன்?<br>—மோ. க. காந்தி | .... 2 |
| 3. | தமிழ் நாட்டில் புதிய கதர் வேலைத் திட்டம் | .... 10 |
| 4. | நிர்மாண வேலைத் திட்டம்<br>—மோ. க. காந்தி | .... 12 |
| 5. | தார்மிகப் புரட்சி<br>—கி. க. மஷ்ருவாலா | .... 15 |
| 6. | தமிழ் நாடு கிளையின் சில முக்கிய விஷயங்கள் | .... 22 |
| 7. | ராட்டையும் ராஜரீகமும்<br>—மோ. க. காந்தி | .... 26 |
| 8. | பாதுகாப்புத் தத்துவம்<br>—கி. க. மஷ்ருவாலா | .... 29 |
| 9. | கண் காட்சி எப்படி யிருக்க வேண்டும்?<br>—மோ. க. காந்தி | .... 34 |
| 10. | சம்பூர்ண கிராம சேவைக் கங்கோத்ரி<br>—மோ. க. காந்தி | .... 36 |
| 11. | வினா—விடை<br>—மோ. க. காந்தி | .... 40 |
| 12. | டிரஸ்டி போர்டின் கூட்டம் | .... 45 |


113712

7-DEC 1946
MADRAS

# I. ராட்டைப் பாட்டு

(ஸ்ரீ ஸியாராம் சரண் குப்தாவின் ஹிந்திப் பாட்டைத் தழுவியது)

(1) ராட்டை சுழன்றது பாட்டியின் கையில் ராப்பகல் ஓயாதே,
மீட்டிட ஓங்கி முரலும் யாழென மேவியதே கீதம்!

பஞ்சாலையே யன்று;
நெஞ்சீரமே யில்லார்
பஞ்சைகளைப் பிணிக்க
நஞ்சால் நிர்மித்தாரே!

பூட்டுகள் இற்றன பாரிடை வெற்றி பல்கிப் பொங்கியதே!
ராட்டை சுழன்றது பாட்டியின் கையில் ராப்பகல் நவின்றே!

(2) நேரிய கூரிய கதிரில் விளையும் நுண்ணிழையின் வலியால்
பாரிடைக் கடல் பல பாய்ந்திடுவோமே, பகர்வீர் யார் வல்லார்?

கொள்ளோம் நாங்கள் பயமே!
அள்ளோம் அயலார் பொருளை,
தள்ளோம் பிறரைக் கீழே,
விள்ளோம் வீணும் மொழியை.

ஆரியர் ராட்டைச் சுழலிலே காணே அழியாக் களிப்புவியை
நேரிய கூரிய கதிரின் விளைவாம் நுண்ணிழை வலியதுவே!

(3) கூரையினுள்ளே குந்தியிருக்கக் காட்டு நினைவு வருதே!
மாரிகாலமிது, மேகமந்தைமேல் முழங்கியே மேயுது பார்!

எங்கும் இன்பப் பொழிலே!
சங்கை யேதும் இலதே;
நங்குலம் நாளும் வாழும்!
மங்கள மொழிகள் கூறீர்!

கீரையும் சோறும் சன்ம சன்மமும் சகத்தினிலே போதும்,
கூரையினுள்ளே குந்தியிருக்கையில் காடு கண்முன் வருதே!

113712

## II. நூல் நிபந்தனையை வற்புறுத்துவதேன்?

(மோ. க. காந்தி)

"தாமாகவே விரும்பி எத்தனை பேர் நூல் நூற்கிறார்கள், தாம் நூற்ற நூலைக் கொண்டு கதர் வாங்குகிறார்கள் என்பது நூல் நிபந்தனையை வற்புறுத்தா திருந்தால் தெரியவரும். நூல் தர விரும்புவோர் நூல் கொடுத்து கதர் பெற்றுக் கொள்ளட்டும், தர விரும்பாதவர் பணத்திற்குக் கதர் வாங்க வசதி இருத்தல் வேண்டும். நூல் நிபந்தனையைக் கட்டாயப் படுத்துவதால், கதர் உடுத்துவோர் வேறு வழியில்லை யென்று நூல் நூற்பார்கள். ஆனால் அதனால் உண்மையான கதர்ப் பிரசாரம் நடந்து விட்டதாகக் கூற முடியாது."

இந்த வாதம் பழையது. மனிதன் எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்ய விரும்புகிறான். ஆனால் சோம்பலினால் செய்வதில்லை. விதி யுண்டாக்கி விட்டால், மனிதனால் வேலை நடக்கிறது. தனது எந்த வேலையை அவனால் செய்ய வியலவில்லையோ அதைச் செய்வதற்கு பலம் கிட்டுகிறது. ஆகையால், நூல் நிபந்தனையைக் கட்டாயமாக்கியதால், நாம் மக்களை எவ்வகையிலும் நிர்ப்பந்தப்படுத்தவில்லை; நூற்க விரும்புவோருக்கு ஒரு வழி யுண்டாக்குகிறோம். நூற்க விருப்பமில்லாதவர் கட்டாயத்திற்காக எத்தனை நாளைக்கு நூற்பர்? பிறருக்குக் காட்டுவதற்காக நூற்பதானால் ஆடம்பரமாகும். ஆடம்பரம் புரிவோன் தனக்கே தீமை செய்துகொள்வோனாகிறான். அவனால் கதருக்குத் தீங்கு நேராது. இதற்கு மாறாக மதிப்புப் பெறும் பொருட்டோ, நிர்ப்பந்தத்தினாலோ ஒருவர் நூற்கத் தொடங்கினால் நூற்க நூற்க அவருக்கு நூற்பதில் ருசியுண்டாக, பின்னர் அவர் தாமே ஆசையுடன் நூற்கத் தொடங்குவார் என்றும் நான் கூறுவேன். அப்பியாசம் ஆனபின்பும் அவருக்கு அதில் ருசியுண்டாகாமல் நிர்ப்பந்தத்தினால் நூற்பதானால், அவர் கதரை விட்டு விடுவதென்றால் விட்டு விடட்டும். நமக்கு அதனால் ஒன்றும் நஷ்டமில்லை.

நூல் நிபந்தனையின் காரணமாக கதர் வஸ்திராலயங்கள் மூடப்பட்டு விடுமென்றால், மூடப்படட்டும். நான் அதைப் பொருட்படுத்தவில்லை. யாரும் கதர் வாங்கட்டும், வாங்காதிருக்கட்டும் நான் கடை நடத்த விரும்பவில்லை. மக்களுக்கு நூற்கக் கற்றுத்தரவே விரும்புகிறேன். பம்பா

யில் 300, 350 ராட்டைகள் ஓடுகின்றன. ஆனால் இதனால் மட்டும் என்னவாகும்? அங்கே எத்தனை வீடுகள் உண்டோ, அத்தனை ராட்டைகள் சுற்றும்படிச் செய்யவேண்டும். நகரங்களை அஹிம்சை மயமாக்க வேண்டுமெனில் அதற்கு வேறு வழி கிடையாது. சர்க்காரிடம் குண்டிருந்தால் என்னிடம் ராட்டையிருக்கிறது. குண்டிலிருந்து ராட்டையால்தான் காக்க முடியும். அதிலிருந்து தப்ப வேறு எந்த வழியும் வீண்.

நூல் நிபந்தனை யேற்பட்டதால் வஸ்திராலயங்களில் விற்பனை குறைந்து நஷ்டம் விளைய, வஸ்திராலயங்களை மூட நேரிட்டால், மூடிவிடுங்கள்: கதர் விற்பதற்காக வஸ்திராலயங்களை நடத்த வேண்டாம். நகரங்களின் வஸ்திராலயங்களை மூடிவிட்டால் கிராமங்களில் கதரை விற்க வேண்டியிருக்கு மென்பீர்கள். ஆனால் கிராமங்களில் நகரங்களிற் போல, கதர் எப்படி விற்கும்? கிராமங்களில் கதர் விற்பனை யாகாது, விற்கவும் கூடாதென்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். கிராமங்களில் கதர் விற்க வேண்டியதில்லை, உடுத்தவேண்டும். தானே நூற்றுக் கதர் உடுத்த வேண்டும். கதர் வஸ்திராலயங்களுக்காக நாம் சர்க்காரிடமிருந்து அனுமதிப் பத்திரம் பெறுவதைவிட, கதர் மடிந்துபோவது நல்லது. கடைகள் ஒழிந்து போகட்டும். பிறர் தயவால் கதர் உயிர் வாழ வேண்டுமென்றால், அது பிழைக்க முடியாது. அதன் தலைவிதி மடிந்து போக வேண்டியதே. கதரின் நோக்கைப் புரிந்து கொள்வீர்களாயின், நீங்கள் திகில் அடையமாட்டீர்கள். வஸ்திராலயம் எப்படி நடைபெறும், உற்பத்தி ஸ்தலங்கள் என்னவாகு மென்றெல்லாம் பயமுண்டாகாது. நாம் அடியெடுத்து வைத்துவிட்டதால், துணிவு கொண்டுவிட்டதால், ஆபத்துக்களுக்கு ஆயத்தமாயிருக்க வேண்டியதே. இதில் நமக்கு அடிபட வேண்டியிருந்தால் படுவோம், பொறுத்துக் கொள்வோம்.

நீங்கள் கம்பளம், பட்டு ஆகியவற்றைப் பற்றிக் கேட்கிறீர்கள். அவற்றை யார் உடுத்துகிறார்கள். அவைகளை ஏழைகள் உடுத்த முடியுமா? ஒரு சில தனவான்களுக்காக நாம் ஏன் தொந்தரவுக்குள்ளாகவேண்டும்? இந்தப் பொருள்கள் நாடு முழுமையிலும் பரவக்கூடியவை யல்ல. வஸ்திராலயங்களில் நாம் இதரப் பொருள்களை வைத்திருப்பது போல் வேண்டுமானால் கம்பளமும் பட்டும் வைப்போம். ஆனால் அது நமது வேலையல்லவென்பதை யுணர்வோமாக. கம்பளத்திற்கும் பட்டிற்கும் நூல் நிபந்தனையை இப்பொழுதே ஏற்படுத்தவேண்டாம். நூல் செலாவணியை இப்பொழுதே தொடங்கவேண்டாம். கிராமக் கைத்தொழிற்

பொருள்களுக்கு நூல் கேட்போமா? கம்பளி, பட்டு ஆகியவைகளையும் அவ்வாறே மதிப்போம். நாம் உண்மையுடனிருந்தால், கதரின் மகிமை குறையப்போவதில்லை. கம்பளமும் பட்டும் விற்று அதனால் வஸ்திராலயச் செலவைச் சரிக்கட்ட நினைத்தோமானால், அதனால் கதருக்கும் தீங்கேயன்றி நன்மை யுண்டாகாது. கம்பளம்—பட்டின் உதவியைக் கொண்டு கதரை நடத்த விரும்பினோமாயின் கதரை அங்கஹீனமாக்குவோம். பிறகு அது முன்னேற இயலாது. அது தானாகவே நடக்கக் கூடியது; எதனுடைய உதவியையும் நம்பி இருப்பதற்கு அதற்கு அவசியமில்லை. கதரை யாரும் அழிக்க இயலாது. மில் அதை அழிப்பதாவது? அதுதான் அழிவுறும். அதைப் பற்றி நமக்குக் கவலை இல்லை.

வஸ்திராலயங்களில் பருத்தி எடுப்பதிலிருந்து தொடங்கி எல்லாக் கிரியைகளும் நடைபெறவேண்டும். விற்பனை யென்பது அதற்கு ஒரு கீழ்த்தரமான வேலையாகும். காகூபாயி பம்பாய் வஸ்திராலயத்தின் நிர்வாகி. நான் அவருடைய ஆற்றலைக் காண விரும்புகிறேன். அவர் கையில் பேனாவையல்ல, ராட்டையைக் காண விரும்புகிறேன். ராட்டையிலும், கதரின் எல்லாக் கிரியைகளிலும் அவர் தேர்ச்சியுற வேண்டும். நான் வஸ்திராலயத்தில் இருந்தேனாயின் நூல் நூற்பேன், பஞ்சு வெட்டுவேன். வஸ்திராலயங்களின் மூலமாக மக்களுக்கு நூற்புக் கற்பிக்க வேண்டும், பஞ்சு வெட்டல் போதிக்கவேண்டும், தம் தேவைக்கு நூற்கக் கற்றுத்தரவேண்டும். இன்று நாம் ராட்டைக் கற்பிக்கச் சிறிது முயற்சி செய்து வருகிறோம். ஆனால் வீட்டிற்கு வீடு ராட்டையைப் பரவச்செய்ய வேண்டுமாயின் பஞ்சரைத்தல், வெட்டுதல் முதலிய எல்லாக் கிரியைகளையும் போதித்தாகவேண்டும். பஞ்சுத்திரி வாங்கி நூல் நூற்றலை நான் நல்லதென்று கருதவில்லை. தாமே திரியும் செய்யவேண்டும். யந்திர வில்லால் தயாரான திரி இப்பொழுது வழங்குகிறது, அது நிற்கவேண்டும். ஒவ்வொருவரும் வெட்டித் திரி செய்யவேண்டும். தாமே செய்த திரியையே நூற்கவேண்டும். அப்பொழுதுதான் அவர் கதரை ஏற்றதாகக் கூற முடியும். நான் கையால் பஞ்சு வெட்டுவதை விரும்புகிறேன். மிகவும் கீழ்த்தர பஞ்சையும் கையால் வெட்டித் தயாரித்த திரியைக் கொண்டு 20 நெ. வரையில் நூற்க முடியும். மில்களிலோ அத்தகைய பருத்தியினால் 6—7 நம்பருள்ள நூலும் நூற்க முடிவதில்லை. வில்லால் வெட்டுவதைவிடக் கையால் பிரிப்பது எனக்குப் பிடிக்கிறது. அதில் க்ஷயம், மூச்சு என்ற எந்த நோயும் வருமோவென்று அஞ்சத் தேவையில்லை. அரண்மனையில் வாழும் மகாராணியும் அதைச் சுலபமாகச் செய்யலாம். சிறிய

பிள்ளைகளும் முதியோரும் கூட கையால் திரி செய்யலாம். இது அவ்வளவு சுலபமான கிரியையாகும்.

இன்று முதுகிற் சுமந்து சுற்றியோ, வஸ்திராலயங்களில் விற்றோ கதர் - பிரசாரம் செய்யவேண்டியதில்லை. யாருக்கும் தயாரித்த கதர் தரவேண்டியதில்லை. 'இந்த ராட்டையை எடுத்துக் கொள்ளுங்கள், இந்தப் பஞ்சை எடுங்கள், இதைப் பிரியுங்கள், திரியாகச் சுற்றுங்கள், நூறுங்கள்' என்று கூறுவோம். 'தம் கிராமத்திலேயே நெசவாளரைக் கொண்டு நெய்வித்து உடுத்துங்கள்' என்போம். வஸ்திராலயங்களில், கதரா, திரியும் பஞ்சுங் கூட இருத்தலாகாதென்று சொல்வேன். ஜனங்கள் கேட்டால் பருத்தி தருவோம், நூற்புக்குத் தேவையான கருவிகள் தந்து நூற்கவும் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்வோம். பிறகு இந்தியாவில் கதருக்கோ, துணிக்கோ எவ்வகைக் கஷ்டமும் இல்லாதிருப்பதைக் காண்பீர்கள். துணிப் பங்கீடு செய்யப்படுகிறது; பின்னரும் துணிப் பஞ்சம் தீருவதாயில்லை. அதை என்னால் போக்கமுடியும். துணி விஷயத்தை என்னிடம் ஒப்புவித்தால், எல்லோருக்கும் என்னால் துணி தர முடியும்....

ஆஸ்பத்திரிகளுக்குத் துணி தருவதா, இல்லையா என்று கேட்கிறீர்கள். ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளிகள் எங்கிருந்து நூல் கொண்டு வருவார்கள்? அவர்கள் எப்படி நூல் நூற்க முடியும்? ஆஸ்பத்திரியைப் போலவே காங்கிரஸ் கமிட்டிகள், ஜில்லா போர்டுகள், பாங்குகள் முதலிய ஸ்தாபனங்கள், கண் காக்ஷிகள், காங்கிரஸின் மகாநாடுகள் முதலியவைகளுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள கதர் செலவாகிறது; இவர்கள் நூல் எங்கிருந்து கொண்டு வருவார்கள்? நூல் இல்லாமலே, இவர்களுக்குத் துணி தருவது சரியல்லவா? இவர்களால் நூல் தர இயலவில்லையெனில் கதரை உபயோகிப்பதை இவை விட்டுவிட வேண்டுமென்று நான் சொல்லுவேன். இவர்கள் நூல் கேட்டு வாங்கி வரலாம். தமது அங்கத்தினரை நூற்கச் செய்யலாம், நண்பர்கள் முதலியவர்களிடமிருந்தும் பெறலாம். நான் நூல் நிபந்தனையின் விஷயத்தில் விலக்களிக்க விரும்பவில்லை. பூனாவில், தின்ஷா மேத்தாவின் இயற்கை வைத்திய சாலையை நான் ஏற்றிருக்கிறேன். அங்கே மில்துணியை உபயோகிப்பேனா? நான் தின்ஷாவிடம், 'என் நூலைத் தருகிறேன், அதைக் கொண்டு துணி வாங்கிக் கொள்ளுங்கள்' என்று கூறியிருக்கிறேன். ராஜாவாயிருக்கட்டும், மகாராஜாவாக இருக்கட்டும், யாவரும் நூல் தந்தே தீரவேண்டும்.

நூல் நிபந்தனையின் தீர்மானத்தில் அக்கம் பக்கத்தில் விலைக்கு நூல் வாங்கித் தருவதற்கு வசதி அளிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் இது என் உத்தேசத்திற்கு முரணானது. நான் இதை விரும்பவில்லை. நான் நண்பர்களிடமோ, அக்கம் பக்கத்தவர்களிடமோ நூல் வாங்கிக் கொள்ளலாம் என்று சொன்னதுண்டு, ஆனால் விலைக்கு வாங்கலாம் என்று சொல்லவில்லை. நண்பர்களிடம் பணம் கொடுத்தா நாம் எதுவும் வாங்குகிறோம்? அப்பொழுது அது வியாபாரமாகும். நம்மிடம் ஒரு பொருள் இல்லையெனில் அதை அயலாரிடம் வாங்கிக் கொள்கிறோம். அது நமக்குக் கிடைத்ததும், திரும்பக் கொடுத்து விடுகிறோம். அயலார் என்ற காரணத்தினால் அவர் அதை ஏற்பதில்லை. ஆனால் அதில் பணப் பேச்சே எழுவதில்லை. வேலைக்காரரைக் கொண்டு நூற்கச் செய்வதென்றும் தீர்மானத்தில் கண்டிருக்கிறது. அதன் கருத்தென்னவெனில், நமது குடும்பத்தினர் நூல் நூற்க, அந்த நூலைத் தமது என்று நாம் கொடுப்பதுபோல், நமது வேலைக்காரர்களையும் குடும்பத்தினராகக் கருதி அவர்களுடைய நூலையும் தமது நூலாகவே தரலாம் என்பதே. ஆனால் யாரேனும் நூற்பதற் கென்றே கூலியாளை அமர்த்திக் கொண்டால் அது சரியாகாது. அது நூலை விலைக்கு வாங்குவதாகவே கருதப்படும். வீட்டு வேலைகளுக்காக அமர்த்தப் பட்ட வேலைக்காரர் சிறிது நேரம் நூல் நூற்று அதை நமக்கு அளிப்ப தென்றால், தவறில்லை. பம்பாயிலுள்ள "டைம்ஸ் ஆப் இந்தியா" ஆபீஸில் கதர் தேவையாயிருந்தது. அவர்கள் என்னிடம் வந்தனர். நாங்கள் 'நூலுக்கு என்ன செய்வது?' என்றனர். நான் 'உங்கள் ஆபீஸில் எத்தனையோ வில்லைச் சேவகர்கள் இருக்கிறார்கள், எத்தனையோ வேலையாட்கள் இருக்கிறார்கள், அவர்கள் நாள் முழுவதும் விலாசம் ஒட்டும் வேலையே செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நூற்கக் கற்றுக் கொடுங்கள், ஒன்றிரண்டு மணி நேரம் நூற்கச் செய்யுங்கள், பிறகு அந்த நூலுக்குக் கதர் வாங்கிக் கொள்ளுங்கள்' என்றேன்.

நகரங்களில் நூற்பதற்காக கிளப்புகள் அமைக்கலாம் என்று நான் ஆலோசனை கூறியிருந்தேன். ஆனால் அதற்கு வேறு பொருள் கொள்ளப் பட்டிருக்கிறதென்று இப்பொழுது தெரிகிறது. பம்பாயில் கிளப் அமைக்கப்பட்டது, ஆனால் நூல் விற்பனைக்கு அது ஓர் கருவியாக உதவிற்று. அங்கே கூலிக்கு ஜனங்கள் நூற்கிறார்கள். அவர்களுடைய நூலை வாங்கி வஸ்திராலயத்தில் கொடுத்து பிறர் கதர் வாங்குகிறார்கள். இது சத்தியத்தைக் கொலை புரிவதாகும். நான் சொன்னது, 'பெரிய பெரிய நகரங்களில் இருப்பதற்கு இடம் அகப்படுவதில்லை, சிறிய சிறிய அறைகளில் இருக்க வேண்டி

யிருக்கிறது. இடத்திற்கு நெருக்கடியாயிருக்கிறது. அங்கே ராட்டை வைத்துக் கொள்வதும், நூற்பதும், பஞ்சு வெட்டுவதும் சிரமமாகும். ஆகையால் வஸ்திராலயங்களிலும், தெருக்களிலும் நூற்கும் கிளப்புகள் அமைத்து அங்கே, ஜனங்கள் வந்து நூல் நூற்று, பஞ்சு வெட்டித் திரிகள் செய்தல் நலம். இதனால் இட நெருக்கடியினால் நூல் நூற்பதில் அவர்களுக்குள்ள கஷ்டம் விலகக் கூடும். மேலும் ஒரே இடத்திற்கு நூற்பதற்கு ஜனங்கள் வந்தால், அவர்களுக்குக் கற்றுத்தர ஏற்பாடு செய்வதும் சுலபம்.' ஆனால் நான் கற்பனை செய்த கிளப்புக்கு நேர் மாறான கிளப்புகள் அமைக்கப் பெற்றன. இவற்றை மூடிவிடவேண்டும். நாம் சத்தியத்திலிருந்து பிறழக் கூடாது. நமது உள்ளத்திற்கே வஞ்சனை செய்யக் கூடாது. கதர் விற்கும் ஆசையை இப்பொழுது விட்டுவிட வேண்டும். இனிக் கதரைக் கற்பிக்கும் ஆசை கொள்ள வேண்டும். இதனால் கதர் விற்பனை முற்றிலும் நின்று விட்டாலும் ஒன்றும் நஷ்டமில்லை. ஆனால் நான் கற்பனை செய்யும் கதர் இதனால் வளரவே செய்யும்.

பம்பாயின் வஸ்திராலயத்தின் உருவம் இனி எப்படி யிருக்க வேண்டுமென்று நீங்கள் கேட்கிறீர்கள். என் கருத்தைத் தெளிவாய் வெளியிட நானும் விருப்புகிறேன். முதலில் கால்பாதேவியைப் போன்ற கடை வீதியின் நடுவிலிருந்து அதை மாற்றவேண்டும். தாதர், பார்லா, முதலிய பக்கத்திலுள்ள ஓர் இடத்திற்கோ அல்லது சுலபமாக வேண்டிய இடம் கிடைக்கக் கூடிய வேறு தூரத்திலுள்ள இடத்திற்கோ கொண்டு போக வேண்டும். வஸ்திராலயத்தில் இன்று நடைபெறும் வேலைகளும் மாற்றப் படவேண்டும். நிர்வாகி, வருகிறவர்களைக் கதர் வாங்கும்படித் தூண்டமாட்டார். அவர் அங்கு அமர்ந்து தக்ளியில் நூல் நூற்றுக் கொண்டிருப்பார். வருகிறவர்களையும் நூற்கச் செய்வார். அவர்களுடன் பேசி, கதரின் புதிய நோக்கை அவர்களுக்கு விளக்க முயலுவார். யாரேனும் கற்க விரும்பினால் நூற்கக் கற்பிப்பார். அதுவும் விலைக்கு வாங்கிய திரியைக் கொண்டு அல்ல, பருத்தி அரைப்பதிலிருந்து தொடங்கி, அதைப் பிரித்து நூற்கும்வரை சம்பூர்ண நூற்பைக் கற்பிப்பார். இந்தப் புதிய இடத்தில் அவர் சில தொழிலாளிகளை வைத்திருப்பார். தறியும் நடத்துவார். நூற்போரின் நூலை நெய்வித்துத் தருவார். ராட்டை முதலிய உபகரணங்கள் தயாரிக்கச்செய்வார். வருகிறவர்களுடைய கருவிகளைச் செப்பனிட்டுத் தருவார். அங்குள்ள காற்று சுத்தமாயிருக்கும், சூழ்நிலை தூயதாயிருக்கும், எல்லாம் ஒழுங்காகவும் முறையாகவும் நடைபெறும். ராட்டைகள் சித்தமாயும் சூழ்நிலை உள்ளத்தைக் கவருவதாயுமிருக்குமாதலால், உட்கார்ந்து

நூற்க வேண்டுமென்று தானே தோன்றும். அங்கே வந்து கதர் வாங்க விரும்புவோருக்கும் வசதியிருக்கும். இன்று வரையில் பம்பாய் வஸ்திராலயம் ஓர் 'பெரிய விற்பனை ஸ்தலமாக' (Clearing house) இருந்தது. இனியும் அவ்வாறிருக்கும், ஆனால் வேறு வகையில். இன்று வரையில், பம்பாயிலுள்ளவர்கள் எதை விரும்புகிறார்கள் என்பதில் கண்ணுங் கருத்துமாயிருந்தோம். ஏதேனும் ஒரு வகை அங்கவஸ்திரத்திற்குக் கிராக்கியுண்டானால், அதைத் தயாரியுங்கள் என்று உற்பத்தி ஸ்தலங்களுக்குத் தெரிவித்து வந்தோம். ஓர் புதிய கரையைக் கண்டதும், ஆந்திராவிடம் அத்தகைய சேலைகள் செய்து தரும்படிக் கூறி வந்தோம். அந்தமாதிரியான சரக்குத்தயாரிப்பதற்காக வஸ்திராலயத்திலிருந்து அவ்விடங்களுக்கு, பிரத்யேகமாக ஆட்களும் அனுப்பி வந்தோம். நாம் மசூலிப்பட்டணத்தில் சேலைகள் அச்சடிக்கச் செய்தோம். இதனால் இறந்து கொண்டிருந்த கலை புத்துயிர் பெற்றெழுந்தது. ஆனால் இனி நமது போக்கை மாற்றாவிட்டால், அதுவே கதரை மண்ணாக்கிவிடும். இனிக் காரியாலயங்கள் தமது அக்கம் பக்கத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். அதே நோக்குடன் சரக்கைத தயாரிக்க வேண்டும். அங்கேயே அதைச் செலவழிக்க வேண்டும். பம்பாய் சொல்வதைக் கேட்டு ரகங்களை வஸ்திராலயங்கள் உற்பத்தி செய்யலாகாது. அங்கங்கே எஞ்சியுள்ளவற்றை பம்பாய் எடுத்துக் கொள்ள வேண்டும். அவற்றை விற்று அதிலேயே திருப்தியுற வேண்டும். நகரங்கள் விரும்பும்வகைகளைத் தயாரித்துத் தருதல் இனி நமது கடமையல்ல. ஆனால் தமக்குத் தேவையானவைகளை எப்படிச் செய்து கொள்வதென்பதை அவைகளுக்குப் போதிப்பதே நமது கடமையாகும்.

அதனாலேயே, கடைத் தெருவிலிருந்து வஸ்திராலயத்தை மாற்ற வேண்டுமென்று சொன்னேன். நகரத்திற்கு அருகாமையில் ஏதேனுமொரு ரமணீயமானதும் விஸ்தாரமானதுமான இடத்தை அமர்த்திக் கொள்ளுங்கள். அங்கே ஆனந்தமாயிருங்கள். பழைய காலத்தில் சூரத் நகரத்திற்கு வெளியே தப்தி நதிக் கரையில் ஆங்கிலேயர் தமது பண்டசாலையை அமைத்துக் கொண்டார்கள் என்று சொல்கிறார்களே, அப்படிச் செய்யுங்கள். அவர்கள் அங்கிருந்தே ராஜ்யம் நடத்த ஆரம்பித்தார்கள். அவர்களுடைய முயற்சி இந்தியாவின் கதரையும், பிற கைத் தொழில்களையும் நசுக்கும் பொருட்டு நடைபெற்றது. நமது முயற்சியோ அவற்றிற்குப் புத்துயிர் அளிப்பதற்காகும். அங்கே யாரேனும் தப்பித்தவறி தொழிலாளி வந்தால் அவனைத் தறியில் அமர்த்துங்கள். அவனைக்

கொண்டு நூற்பும், பஞ்சு வெட்டுவதும், பிற தொழில்களும் தொடங்கச் செய்யுங்கள். ஓர் ஆதர்சமான கிராமமே ஸ்தாபியுங்கள். கதர் வஸ்திராலயத்தை ஓர் கவர்ச்சியுள்ள இடமாகச் செய்யுங்கள். பம்பாயின் குழப்பத்திலிருந்து வெளியேறி, அமைதி பெற விரும்புவோர் அங்கு வருவார்கள். குறைந்தது பிரதி சனிக்கிழமையும் வருவார்கள். கதரும் அங்கிருந்து வாங்கிச் செல்வார்கள், நூற்பும், பஞ்சு வெட்டுவதும் கற்றுப் போவார்கள். அங்கே கிராமத்து முறைப்படி தம் பொருள்களைத் தயாரிப்பீர்களானல், நகர மக்களையும் கிராம வாழ்க்கையின் ரஸத்தை நுகரச் செய்ய இயலும்.

பம்பாயின் ஜனங்கள் விஷயத்தில் நமது பொறுப்பை நினைப்பீர்களாயின், நான் 'பொறுப்பாவது என்ன?' வென்று கேட்பேன். பம்பாயிலுள்ளவர்களின் எண்ணங்கள், ருசிகள் ஆகியவை இன்று போல் இருப்பின் என்ன செய்வீர்கள்? குதிரைப் பந்தயம், சூதாட்டம், சினிமா, நாடகம், நாட்டியம் ஆகியவற்றில் நீங்கள் ருசி கொள்ள முடியுமா? அந்தப் பக்கமே போக விரும்புவோரை நாம் என்ன செய்ய முடியும்? ஆம், கிராம வாழ்க்கையின் அனுகூலங்களை யாரேனும் விரும்பினல் அவர்களை நிச்சயம் வரவேற்போம். அவர்களுக்கு வசதிகள் அளிப்போம். இதுவே நமது கடமையைச் செய்வதாகும்.

பம்பாய் ராஜீய மனப்பான்மை கொண்ட நகரம் என்று சொல்லுகிறீர்கள். நாம் அவர்களுக்கு நாட்டின் ராஜீய நிலைமையும் நமது புதிய முறையை ஒட்டியே இருக்கிறதென்றும், இதில்லாவிட்டால் நமது ராஜீய வேலை மட்டும் நம்மைச் சக்தியுள்ளவர்களாகவும் தோல்வியுருமலும் ஆக்க முடியாதென்றும் அறிவுறுத்தினல்தான், கதரின் புதிய அமைப்பு அங்கே செழித்தோங்கும். கதர் அஹிம்சையின் சின்னமாயிருந்தாலன்றி நான் அதற்கு மதிப்பளியேன் என்று மட்டும் கூறுவேன். ஒரு அமெரிக்கர் 'சொல் முளைப்பதில்லை, செயலே முளைக்கும்' என்ருர். தமது நம்பிக்கையினுலும், தவத்தினுலும், வஸ்திராலயத்தையும், அதன் அக்கம் பக்கத்திய சூழ்நிலையையும் நீங்கள் அமைப்பதை யொட்டி, உங்களுக்கு வெற்றியுண்டாகும்.

## III. தமிழ் நாட்டில் புதிய கதர் வேலைத் திட்டம்

### முதல் 3-மாதத்திய விவரம்

கீழே கண்ட புள்ளி விவரங்கள் நகரங்களிலுள்ள 24 கதர் வஸ்திராலயங்களில் நடைபெற்ற வேலையை விளக்குகின்றன :

| | | 1945 | | |
|---|---|---|---|---|
| 1. கதர்விற்பனை | | ஜூலை. | ஆகஸ்டு. | செப்டம்பர் |
| (அ) நூலில்லாமல் | ரூ. | 2,911 | 2,947 | 3,793 |
| (ஆ) நூலுக்கு. | ,, | 52,554 | 72,487 | 7,31,213 |
| (இ) நூல்கூபன் | ,, | 24,346 | 35,894 | 48,691 |
| மொத்தம் | ,, | 79,811 | 1,11,328 | 1,25,607 |
| 2. வாங்குவோரிடமிருந்து கிடைத்த நூல் : | | | | |
| சிட்டங்கள் | ரூ. | 28,876 | 31,084 | 37,593 |
| ,, விலை | ,, | 4,831 | 5,164 | 3,406 |
| 3. பட்டை விற்பனை. | | | | |
| ராத்தல் | | 3,745 | 4,978 | 5,659 |
| 4. உபகரணங்கள் விற்பனை : | | | | |
| | ரூ. | 4,384 | 6,353 | 6,551 |
| 5. கதர் கூபன் கொடுத்தது. | | | | |
| (அ) ஒரு கிளையில் | ரூ. | 1,165 | 1,123 | 1,212 |
| (ஆ) மூன்று ,, | ,, | 42 | 76 | 59 |
| மொத்தம். | ,, | 1,207 | 1,199 | 1,271 |

6. உபகரணங்கள் விற்பனை (ரகவாரியாக).

| | |
|---|---|
| பெட்டி ராட்டை | 389 |
| கிசான் ராட்டை | 1,642 |
| தனுஷ்தகுவா | 283 |
| கிசான் ராட்டை பகுதிகள் | 1,040 |
| தகுவா | 6,956 |
| தக்ளிகள் | 6,552 |

7. உபகரணங்கள் உற்பத்தி.

சங்கர் லால் பட்டறையிலும், மற்ற 5 இடங்களிலும் சேர்ந்து ரூ. 31,209.

8. 37 ஏஜண்டுகள் மூலமாக கதர் விற்பனை.

ரூ. 32,369 32,133 35,000.

(டிஸம்பர் விற்பனை விவரம் முழுமையும் வரவில்லை. கொடுக்கப்பட்டிருப்பது உத்தேசமே).

9. உற்பத்தி ஸ்தலங்களில் கதர் விற்பனை :

ரூ. 39,846 55,960 40,158.

10. உற்பத்தி ஸ்தானங்களின் மூலமாக கிராமங்களில் வேலை. ஜனத்தொகை 21,29,363.

11. பிரதி மாசமும் ஒவ்வொருவருக்கும் விற்பனை.

ரூ. 0·019 0·027 0·012

தீபாவளிக்கு 0.065 (மொத்தம்).

புதிய திட்டம் ஜனங்களுக்கு அறிவிக்கப் பட்டதிலிருந்து மாத விற்பனை பெருகிய வண்ணமிருக்கிறது. தீபாவளி விற்பனையைவிட அதிகம் விற்றிருப்பது கீழ்க்கண்ட விவரத்திலிருந்து விளங்கும் :

| | | 1944 | 1945 |
|---|---|---|---|
| மார்ச்சு | ரூ. | 2,29,440 | 2,55,956 |
| ஏப்ரல் | ,, | 2,88,637 | 4.54,531 |
| மே | ,, | 2,13,494 | 3,17,963 |
| ஜுன் | ,, | 2,33,118 | 3,64,088 |
| மொத்தம் | ,, | 9,64,689 | 13,92,538 |

1945 இன் முதல் மூன்று மாதங்களில் கதர் விற்பனை மிகவும் அதிகரித்தது. அதாவது ரூ. 10,79,164. '45 ஏப்ரலிலிருந்து கதர் உற்பத்தி குறையத் தொடங்கிற்று. மாதம் இரண்டு இலக்ஷத்திற்கே உற்பத்தி நடைபெற்றது; ஏனெனில் பல நெசவுக்காரர்கள் விட்டுப்போய் விட்டார்கள். வியவசாயக் காலமாகையால் நூல் உற்பத்தியும் குறைந்துவிட்டது. '45 ஜுன் வரையில், புதிய திட்டத்தை நன்கு புரிந்து கொள்ளாமையாலும், கதரை வாங்கிச்சேமித்து வைக்கத் தொடங்கினமையாலும், நல்ல விற்பனை நடந்தது. இப்பொழுது நம்மால் மக்களின் தேவையையும் பூர்த்தி செய்ய இயலவில்லை.

# IV. நிர்மாண வேலைத் திட்டம்

[மோ. க. காந்தி]

*1941*-ஆம் வருஷத்தில் 'நிர்மாண வேலைத் திட்டம்' என்ற பெயருடன் நான் எழுதியிருந்த சிறு நூலின் முற்றிலும் திருந்திய புதிய பதிப்பாகும் இந்நூல். இதில் கூறப்பட்டுள்ள வேலைகள் எத்தகைய வரிசை கிரமத்தையு மொட்டி விவரிக்கப்படவில்லை. ஒவ்வொன்றிற்கு முரிய சிறப்பை யொட்டி அமைக்கப் பட்டனவோ வெனில், இல்லவேயில்லை. சுதந்திரத் திற்கு இன்றியமையாத முக்கியமான வேலை யேதேனும் இந்நூலில் விடப் பட்டுவிட்டதாக வாசகர்களுக்குத் தெரிந்தால், அதை வேண்டுமென்றே ஒதுக்கியிருப்பதாக எண்ணவேண்டாம். அவர்கள் எனது திட்டத்தில் புதிய வேலைகளைச் சேர்த்து எனக்குத் தெரிவிக்கலாம். நான் தந்துள்ள வேலைகளின் தொகை முடிவானதல்ல, இதை உதாரணங்களாகவே கருத வேண்டும். இப் பதிப்பில் பல மகத்துவம் வாய்ந்த வேலைகள் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன வென்பதை வாசகர்கள் காண்பார்கள்.

ஊழியர்கள்—தொண்டர்களாயினும் சரி, மற்றோராயினும் சரி—யாவரும் நிர்மாண வேலை திட்டமென்பது, சத்தியம்—அஹிம்சையின் மூலமாக சுதந்திரம் பெறுவதற்குரிய வழியென்று ஐயந்திரிபற அறிந்துகொள்ள வேண்டும். இதை முழுமையும் நிறைவேற்றுவதே பூர்ண சுயராஜ்யமாகும். தேசீய வாழ்வின் திருக்கோயிலை அஸ்திவாரத்திலிருந்து சிகரம் வரையில் நிர்மாணிப்பதற்குதவும் இப்பல்வகை வேலைகளையும் புரிவதில் நாட்டின் 40 கேடி மக்களும் முனைவார்களானால், விதேசி ஆட்சி வேருடன் தகர்ந் தெறியப்பெற்று, சுயராஜ்ய ஆட்சி அமைப்பதே, நிர்மாணத் திட்டத்தின் ஓரே நோக்கமென்பதை யாரும் மறுக்கமுடியுமா? குறைகூறுவோர் இந்த ஆலோசனையைக் கேட்டுச் சிரிக்கிறார்கள்; ஏனென்றால், நிர்மாண வேலைத் திட்டத்தை நிறைவேற்றுவதில் 40 கோடி மக்களும் என்றும் சேரமாட்டார்களாம். அவர்களுடைய இக் கூற்றில் மிகுந்த உண்மை யுண்டு. இந்த வேலைகளைச் செய்து பார்த்தால் நிச்சயமாக லாபமுண்டு என்று கூறுவேன். இந்த வேலைகளில் பற்றுள்ள ஊழியர்கள், தமது மட்டற்ற ஊக்கத்தையும் உழைப்பையும் இதில் செலவழிப்பாரேயாகில்,

பிறவேலைகளைவிட நிர்மாண வேலைகள் சுளுவாயிருக்குமென்பதைக் காணலாம். அஹிம்சையை ஆதாரமாகக் கொண்டதாயுள்ள திட்டம், இதைத் தவிர வேறெதுவும், குறைந்தது, என்னிடமில்லை. பொது ஜனம் அல்லது தனி நபர் சத்தியாக்ரஹம் நிர்மாண திட்டத்திற்கு உதவி யளிப்பதேயாகும். அது ஆயுதம் தாங்கிச் செய்யும் புரட்சிக்குப் பிரதியாக முற்றிலும் உதவும். ஆயுதப் புரட்சியைப்போலவே, சத்தி யாக்ரஹத்திற்கும் பயிற்சி இன்றியமையாததாகும். ஆனல் இவை யிரண்டிற்குமுரிய பயிற்சி முறைகள் வேருகும். சத்தியாக்ரஹமோ, ஆயுதப் புரட்சியோ, அதற்குகந்த சூழ்நிலையிருந்தால்தான் நடத்தப்படும். ஆயுதப் புரட்சிக்கு அணுகுண்டு உள்பட எல்லாவகைப் போர்க்கருவி களையும் கையாளும் பயிற்சி இன்றியமையாததாகும். நிர்மாண வேலைத் திட்டமே சத்தியாக்ரஹத்திற்கான பயிற்சியாகும். ஆகையால் ஊழியர் கள் சத்தியாக்ரஹத்திற்குச் சந்தர்ப்பத்தைத் தேடிக் கொண்டிருக்க மாட்டார்கள். ஆனல் நிர்மாண வேலையைப் பாழாக்குவதற்காக யாரே னும் முயற்சித்தால், சத்தியாக்ரஹம் செய்யச் சித்தமாயிருப்பார்கள். எங்கு சத்தியாக்ரஹகம் புரியவேண்டும், எங்கு கூடாதென்பதை விளக்க ஒன்றிரண்டு உதாரணங்கள் இங்கு தருகிறேன். ராஜீய ஒப்பந்தங்கள் செய்து கொள்ளும் பொழுது முன்போல, இனியும் தடைகள் எதிர்ப் படலாம். ஆனல் மனிதனுக்கும் மனிதனுக்குமிடையே யுள்ள நட்பை யாரும் தடைப் படுத்த முடியாது. சுயநல மற்ற, ஹிருதய பூர்வமான நட்பின் ஆதாரத்தின் மீதே ராஜீய ஒப்பந்தங்கள் அமைக்கப்பட வேண் டும். ஒரே இடத்தில் பெருவாரியாக நடைபெறும் கதர் வேலையை சர்க்கார் அழிக்க முடியும். ஆனல் சொந்தத்தில் கதர் உற்பத்தி செய் வதையும், உபயோகிப்பதையும் எந்த ஆட்சியாலும் தடைசெய்ய முடி யாது. கதர் உற்பத்தி செய்வதும், உபயோகிப்பதும் மக்கள்மீது சுமத்தப் படலாகாது. அதைச் சுதந்திர இயக்கத்தின் ஓர் வேலைத்திட்டமாக மதித்து, மக்கள் தாமாகவே ஆராய்ந்து ஏற்கவேண்டும். கிராமங்களின் ஒற்றுமை யினாலேயே இது நடைபெற முடியும். இதைச் செய்யும்பொருட்டு முன் வைக்கப்படும் ஒவ்வொரு அடியிலும் தடைகள் எழுப்பப்படும். அவர்கள் உலகில் எங்கு சென்றாலும் ஆபத்துக்களினிடையில் புகுந்தே தம் வழியை அமைத்துக்கொள்ள வேண்டும். ஹிம்சை முறையில், முதன் முதலில் சத்தியமே மிகுந்த சிரமங்களுக்குள்ளாகவேண்டி யிருக்கிறது. ஆனல் அஹிம்சையிலோ சத்தியத்திற்கு எப்பொழுதுமே ஜயம். சர்க்கார் ஊழியர்களை நாம் சத்துருக்களாகக் கருதலாகாது. அவர்களை விரோதி

களாகக் கருதுதல் அஹிம்சைக்கு முரணுகும். அவர்களிடமிருந்து விலகியிருக்க வண்டியதே, ஆயினும் நண்பர்களைப்போல் இருக்க வேண்டும்.

எனது இந்த முதல் விண்ணப்பம் வாசகர்களின் உள்ளங்களில் பதிந்துவிட்டதாயின், நிர்மாண வேலைத்திட்டத்தில் அவர்களுக்கு ருசியுண்டாகாதிராது. விளம்பரங்களுடன் செய்யப்பட்டு ராஜீய வேலைகளென்று அழைக்கப்படுபவைகளைவிட நிர்மாண வேலைகள் அவர்களுக்கு அதிகக் கவர்ச்சியுள்ளவையாயும், அதிகச் சிறப்புள்ளவையாயும், அதிக உபயோகமானவையாயும் தோன்றும்.

புனு: 13—11—45

('நிர்மாண வேலைத்திட்டம்' என்ற நூலிலிருந்து)

# V. தார்மிகப் புரட்சி

## (கி. க. மஷ்ரூவாலா)

இன்று நான் நமது தார்மிகக் கருத்துக்களைப் பற்றிச் சிறிது கூறு கிறேன். நமது நாட்டின் சமூக அமைப்பிலும், பொருளாதார நிலையிலும் புரட்சி யேற்படவேண்டிருப்பது போல், தார்மிகப் புரட்சியும் நடைபெற வேண்டுவது இன்றியமையாததென்று நம்புகிறேன். இதுமட்டுமல்ல முதலில் நமது வாழ்க்கையின் இந்தப் பகுதியில் மாறுபாடு தொடங்காத வரையில், புரட்சிக்கு எந்த நாட்டிலும் தேவையான ஆவேசம் மக்களிடையே எழாது. ஒருவனுடைய மத நம்பிக்கை மாறும்பொழுது அவனுடைய பழைய கருத்துக்களும், நம்பிக்கைகளும் தகர்ந்துவிடு கின்றன; அவன் புதிய நம்பிக்கைகளும், கருத்துக்களும் தாங்குவதால் அவனது வாழ்க்கையே விசித்திரமான வகையில் மாறிவிடுகிறது; அவன் புதியதோர் பலமும் எய்துகிறான். சில சமயங்களில் பெரிய ஆபத்திற் சிக்குண்டதால் ஒருவனுடைய வாழ்க்கை பெரிதும் மாறுகிறது. ஆனால் சந்தர்ப்பங்களின் நிர்ப்பந்தத்தினால் உண்டானதாயின் அவனுக்குப் புதிய உத்ஸாகம் உண்டாகாது. இதற்கு மாறாகச் சில சமயங்களில் தர்மம், நீதி ஆகியவற்றிலுள்ள உறுதியையே தளரச்செய்துவிடுகிறது. ஆனால் வாழ்வில் தார்மிகப் புரட்சி ஏற்படும்பொழுதோ, ஓர் புதிய நோக்குண்டா வதால், மலையை யொத்த உறுதியும், மின்னலை யொத்த வேகமும் ஒளியும் வருகின்றன.

நாம் ஆத்மபலமென்றும் நீதிபலமென்றும் அடிக்கடி பிரஸ்தாபிக் கிறோம். இவை எத்தகைய வென்பதற்கு நான் இவ்வாறு விளக்கம் கண்டிருக்கிறேன்: ஒவ்வொரு மனிதனிடத்திலும் ஒரு சக்தி யிருக்கிறது, அது ஓர் கருத்தையோ, நம்பிக்கையையோ, நபரையோ பற்றிக் கொள்ளுமானால், அவன் அதனால் முறிந்தாலும், இறந்தாலும், பொருள் போகம் எல்லாம் போனாலும், உற்றார் உறவினர் துன்பமுற்றாலும், அவர்களுடைய விரோதம் கிட்டினாலும், தன் பற்றை விடுவதில்லை. இந்த சக்தியே அவனுடைய ஆத்மபலமாகும். இதைப் போலவே ஆத்ம பலத்தை விடச் சிறிது குறைவுள்ள மற்றொரு பலமும் ஒவ்வொரு மனிதனிடமும் உண்டு. அது உலக சுகம், வசதிகள், இலாபங்கள் ஆகிய வற்றைப் பெறுவதில் ஓர் வரம்பினுள் நிற்க உதவுகிறது. எவ்வளவுதான்

வசதிகளும் லாபமும் கிடைப்பதாயினும், அதன் பொருட்டு எல்லையை மீறவேண்டுமாயின், அவன் அதைச் செய்யான்; அதனுல் எய்தும் கஷ்டத்தை ஏற்பானேயன்றி தன் உறுதியைத் தளர விடான். உலக இன்பங்களை, தனது உறுதியின் வரம்பை மீருமல், நுகர்வதற்கு உதவும் அடக்கமே மனிதனுடைய நீதிபலமாகும்.

எவைகளினுல் மக்களின் வாழ்க்கை மாற்றமெய்துகிறதோ, எது சத்தியம், நீதி, நியாயமுறை ஆகியவை நிரம்பிய வாழ்வை அளிக்கிறதோ, அத்தகைய நன்மை விளைவிக்கும் மாறுபாடுகளெல்லாம் ஆத்ம பலமும் நீதி பலமும் தலையெடுத்த பின்னரே உண்டாகின்றன. இந்தச் சக்தியை எழுப்பக் கூடிய பெரியதொரு உண்மையை மனிதன் காணும் வரையில் அவனுடைய இந்தச் சக்தி தலையெடுப்பதில்லை. இத்தகைய காக்ஷியைக் கண்டதும் அவனிடம் புதிய சக்தியுண்டாகி, தன்னையும் சமூகத்தையும் திருத்தும் பொருட்டு, இடையருமுயற்சி செய்கிருன்; அவனுடைய நிலை வழியறியாத காட்டில் சிக்கி இருட்டில் அல்லலுறும் ஒருவனுக்கு, தூரத்தில் உள்ள கிராமத்தின் வெளிச்சம் ஒரு புறத்திலும், மற்ருெரு சார் சிங்கத்தின் மின்னும் கண்களும் தென்படுவது போன்றதாய் இருக்கிறது.

இன்று நமது ஆத்ம பலமும் நீதி பலமும் உறுதியில்லாதிருக்கின்றன. ஹிந்துக்களுக்கும் சரி, முஸ்லிம்கள், கிறிஸ்தவர்களுக்கும் சரி, தம்மிடமுள்ளவை யாவற்றையும் தியாகம் செய்யத் தூண்டக்கூடியதான உண்மையோ, ஊக்கி வாழ்க்கையைத் திருத்தக்கூடிய தூண்டுகோலோ காணப்படவில்லை. பூஜையோ, நமாஸோ, வீட்டிற்கு வீடு நடைபெற்ருலும், அதையொட்டி விழிப்பும், உறுதியும் கொண்ட சிரத்தையைக் காணவில்லை. பழைய வழக்கங்கள் தேய்ந்துகொண்டிருக்க, அவற்றின் இடத்தைப் புதிய உண்மைகள் ஏற்பதையும் காணக்கூடவில்லை. பலவகை தர்க்க வாதங்களைக் கேட்டும், படித்தும்வருவதன் பயனுக, ஐயம் உண்டாகி,இந்தப் பழைய விஷயங்களை உண்மையென்று ஏற்பதா இல்லையா என்ற சந்தேகத்தில் சிக்கியிருக்கிருேம்.பிறவி,மரணம்,மோக்ஷம் போன்ற மத விஷயங்களில் நமக்கு நம்பிக்கையில்லை. இந்த சிவிரத்தில் காலையிலும் மாலையிலும் பிரார்த்தனை செய்வதென்ற ஏற்பாட்டைப் பற்றி மிகுந்த வாக்குவாதம் நடைபெற்றதென்று கேள்விப்பட்டேன் ஒருவர், 'கடவுள் இருக்கிருர் என்பதில் எனக்கு நம்பிக்கையே இல்லை. நாம் பிரார்த்தனைகளை எப்படிச் செய்வது?' என்கிருர். 'இந்த சிவிரம் பொதுவானது, ஹிந்து, முஸ்லிம் கிறிஸ்தவர் யாவருக்கும் சொந்தமானது. ஆகவே ஏதேனும் ஓர் மதத்தைச் சார்ந்ததோ,எல்லோருடையதினின்றும்

எடுத்துச் சேர்த்ததோ ஆன, எவ்வகைப் பிரார்த்தனையும் கூடாது. இங்கே தேசிய கீதங்களும், கொடி வணக்கமுமே நடைபெற வேண்டுமெ'ன்கிறார் மற்றொருவர்.

சிபிரம் என்பது சிறியது, சில தினங்கள்வரை நடந்தேறும் விசேஷக் கூட்டம். இங்கே நீங்கள் பிரார்த்தனையை விட்டாலும், நடத்தினாலும், எந்த வகையில் ஏற்றாலும், ஆக்ஷேபமில்லை. ஆனால் நீங்கள் கிராமங்களில் ஊழியம் செய்யுங்கால் இதை எப்படித் தீர்மானிப்பீர்கள்? கிராமங்களில் கோவிலோ, மசூதியோ, குருத்வாரமோ, மாதா கோவிலோ இருக்கும். அங்கே பூஜை, தீபாராதனை, நமாஸ் முதலியவை நடைபெறும். வருஷத்தில் பல முக்கிய தினங்களில் அங்கு விரதம், உற்சவம், கொண்டாட்டம், பஜனைகள் முதலியன நடைபெற்றுக் கொண்டிருக்கும். மக்கள் மிகுந்த உத்ஸாகத்துடன் இந்த நாட்களைக் கொண்டாட ஏற்பாடு செய்து கொண்டிருப்பார்கள்; சில சமயங்களில் தேவதைகளுக்கு நல்லதும் அல்லாதது மான பலிகளும் அளிக்கப்படலாம்; முஹர்ரம், பீர்களின் நாட்களில் திருவிழா நடைபெறலாம். இந்தச் சந்தர்ப்பங்களில், சில சமயம் கலகங் களும் கைகலப்பும் கூட நடக்குமோ வென்று அஞ்சவேண்டியிருக்கும். இத்தகைய நிலையில், இந்த மத சம்பந்தமான விஷயங்களில் உங்களுடைய போக்கு எவ்வாறு இருக்க வேண்டுமென்ற கேள்வி எழும். மக்கள் நடத்தும் இந்தத் திருவிழாக்களில் நீங்களும் கலந்து கொள்வீர்களா, விலகியிருப்பீர்களா? நீங்கள் அவர்களுடைய மத நம்பிக்கைகளையும், பூஜை நமாஸ்களையும் தவறென்று கருதினால் அவற்றிலிருந்து அவர்களை விலக்கி அவர்களுக்கு உண்மையைப் போதிப்பது உங்கள் கடமையாகும். ஆனால் உண்மையை நீங்களே ஒரு வகையிலும் நிர்ணயிக்க முடியவில்லை யானால், பிறர் மனத்தில் சந்தேகத்தையும், கருத்து வேற்றுமைகளையும் விளைவிக்கத்தான் உங்களால் ஆகும்; அவர்களுக்கு எந்த உண்மையை யும் விளக்க வியலாது. இத்தகைய சந்தேகமான நிலையிலும் உங்களால் சேவை புரியக்கூடுமாயினும், மக்களுடைய ஆத்ம பலத்தையோ, நீதி பலத்தையோ, புரட்சிக்குரிய ஆற்றலையோ விளைவிக்க வியலாதென்பது நினைவிருக்கட்டும்.

நீங்கள் நாட்டையும், சுதந்திரத்தையுமே தலைசிறந்தவை யென்று மதித்தாலும், இவை உங்கள் மனத்தில் கடவுளுக்குரிய இடம் பெற்றால் தான், இவற்றிற்காக எல்லாவற்றையும் தியாகம் செய்யும் சக்தி யுண்டா கும். அதாவது இன்று மக்கள் ராமன், கிருஷ்ணன், அல்லா, குதா வென் றெல்லாம் கூறிக் கடவுளை பழைய முறைப்படி வழி படுவதுபோல், நாட்

டின் பெயரால் நீங்கள் கடவுளை வழிபட்டு, கொடி வணக்கம் முதலிய புதிய முறைகளில் வணங்குவீர்கள். நாட்டின் விடுதலையையும், ஒற்றுமையையும், தமது வாழ்வின் இலக்காகக் கொண்டு அவற்றை எய்தும் பொருட்டு சமூகத்தின் எல்லா அங்கங்களையும் உபயோகிப்பீர்கள்.

ஆனால் இதற்கும், உங்கள் மனம் சந்தேகமின்றி இருத்தல் அவசியம். மதப் பிரசினைகளில் உறுதியான கருத்தின்றி, மக்களின் முன்னிலையில் நாட்டின் பிரசினைகளை உறுதியுடன் விளக்கவோ, அவற்றின் பொருட்டு எல்லாவற்றையும் தியாகம் புரிவதற்கு வேண்டிய ஊக்கத்தையுண்டாக்கவோ இயலாது.

கிறிஸ்தவப் பாதிரிகளின் மதப் பிரசாரத்தின் நோக்கத்தை நாம் சரியென்று ஒப்பவில்லை. நாம் அவர்களிடம், 'நீங்கள் ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம், தொழிற்சாலை ஆகியவை நடத்துவது மிகவும் நல்லதே, ஆனால் இவற்றுடன் கிறிஸ்தவ மத போதனை செய்து, அவர்களுடைய பழைய மதத்தை தூஷிக்கிறீர்களே—அது தவறாகும், அதை விட்டுவிட வேண்டும்' என்றும், 'எங்களுடைய மதத்தின் ஆழ்ந்த தத்துவங்களை உணர்ந்து அவற்றை ஏற்க வேண்டு' மென்றும் கூறுகிறோம்.

இரண்டு மனிதர்கள் இருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள். அவர்களில் ஒருவர் கிறிஸ்துவப் பாதிரி டாக்டர். அவர் 'நான் டாக்டராயினும் ஏசுநாதருடைய பக்தன். அவர் காட்டிய பாதையில் நடக்கும் பொருட்டு ரோகிகளுக்குச் சிகிச்சை புரிவேன். நானும் ரோகிகளும் கடைத் தேறும் பொருட்டு ஏசுநாதருடைய போதனைகளைப் பரப்புவேன். ஏனெனில் நோயாளியின் வியாதி விலகினாலும், மத விஷயத்தில் தவறான வழியில் நடந்து கொண்டிருந்தால் அவனுக்கு என்ன நன்மை யுண்டாகும்?' என்று சிந்திக்கிறார்.

இன்னொருவரும் டாக்டரே, கிராம ஊழியராக விரும்புகிறார். ஆனால் அவருக்கு எந்த மதத்திலும் சிரத்தையில்லை. 'ரோகத்திற்குப் பரிஹாரம் செய்வது மட்டும் என் வேலை, நோயாளிக்கு ஆத்மா உண்டா, இல்லையா, அதன் கதி என்னவென்றெல்லாம் பார்ப்பது என் வேலையல்ல, நான் நோயினின்றும் தப்புவதற்குரிய விஷயங்களும், ஆரோக்கியத்திற்குரிய சில விஷயங்களும் மட்டும் போதிப்பேன்' என்கிறார்.

இந்த இரண்டாவது டாக்டர் கிராம சேவை புரிந்தாலும், ஆத்ம பலம்—நீதி பலம் என்ற வகைகளைச் சேர்ந்ததென்னுமாறு தமது வேலையில் ஆர்வமோ, ஆற்றலோ காட்டமுடியாது. பாதிரி தனியாக வெளி

நாடுகளுக்குப் போகிறார். மலைகளிலும் காடுகளிலும் உள்ள மக்களிடையில் வருஷக்கணக்காகத் தனியாக வசிக்கிறார். தாம் மிகவும் நாகரிக வாழ்வு வாழ்ந்தவராயினும், அநாகரிகமான மக்களுடன் கலந்து வாழ முயலுகிறார். ஆனால் நாமோ, சொந்த நாட்டில் சொந்த மக்களிடையே, நாகரிகம் படைத்திருந்தும் மிடியில் வாடும் கிராமங்களில் வாழ்வதற்குரிய பலம் பெறவில்லை. கிராமங்களில் படித்தவர்களுடைய பழக்கம் கிட்டாது, புதிய செய்திகள் எட்டமாட்டா, ஆரோக்கியமாக வாழ வியலாது என்றெல்லாம் அஞ்சுகிறோம். இந்தப் பலஹீனத்திற்குக் காரணம் நமது வேலையில், எந்த சத்தியத்திற்கு முன் உலகத்தின் பிற லாபங்களெல்லாம் மதிப்பற்றவையாகுமோ, எதன் ஒளியால் நாமும் வழிதுலக்கிக் கொண்டு, பிறருக்கும் வழிகாட்டக் கூடுமோ அதை நாம் காணாததேயாகும்.

நமது முன்னோரின் மதத்தில் நமக்கு நம்பிக்கையில்லையேல், நாமே உண்மையை ஆராய்ந்து பின்பற்றவும், பிறரையும் கடைப்பிடிக்கத் தூண்டவும் உகந்ததாக ஏதாவது ஓர் சித்தாந்தம் அமைத்துக்கொள்வது மாபெரும் கடமையாகிறது. சந்தேகம் நிறைந்த வாழ்வினால் பயனில்லை. அது தீமை பயப்பது, அதனால் ஆத்ம பலமும் நீதி பலமும் அழிவுறும்.

உலகில் வழங்கும் மதங்களில் உயிரில்லை. அவற்றின் சில தத்துவங்களில் விஞ்ஞான சாஸ்திரம் நம்பிக்கையைக் குறைத்துவிட்டது. மனித சமூகத்தின் தற்காலத்திய பிரசினைகளுக்குச் சமாதானம் கூறும் ஆற்றல் அவைகளுக்கில்லை. அவற்றைத் திருத்தியாக வேண்டும். இதனாலேயே இன்று உலகில் நீதிபலமும் அளவில் குறைந்துவிட்டது. இதில் நமது நாடு விலக்குப்பெறத் தகுதியுள்ளதென்பதுமில்லை. மனிதன் அநீதி புரிய வெட்கப்படுவதாகக் காணவில்லை. அநியாயமும், திருட்டும் செய்வோன், மிகுந்த இறுமாப்பும் பெருமையும் கொண்டு தன் வெற்றியையும், சாமர்த்தியத்தையும் புகழ்ந்து கொள்கிறான். ஆகையால் வெற்றிகரமான புரட்சி நடத்தும்பொருட்டு நீதிபலத்தை எழுப்பவேண்டும். நாமே சத்தியத்தை ஆராய்ந்து, ஓரளவுக்காவது அதையுணர நமது ஆத்மாவும் நீதியுணர்ச்சியும் விழிப்பும் எய்தினால்தான் அது சாத்தியமாகும். நம்முன் வாழ்வின் இலட்சியம் ஒன்று இருத்தல் வேண்டும்.

இதையொட்டி பயன்தரக்கூடிய விஷய மொன்று உங்களுக்குக் கூறக்கூடும், தனி மனிதனுடைய ஆத்மா அல்லது மோக்ஷத்திற்கு மதிப்பளித்தாலும் சரி, அளிக்காவிடினும் சரி, தனி வாழ்க்கை நடத்துவதற்

கும், சமூக வாழ்வுடன் ஓரளவாவது தொடர்பு வைத்துக் கொள்ளவே வேண்டியிருக்கிறது. தன் சுகமும், சந்தோஷமும் மட்டும் போதுமான தாக இல்லை. தன் குழந்தைகள், மனைவி, தாய்தந்தையர், சீடர், வேலைக் காரர்கள், அண்டிய மிருகங்கள் முதலியவைகளைப் பற்றிய கவலையிருக் கிறது. தான் இறந்த பின்னரும், இந்தத் தமக்கு நெருங்கியவர்கள் சந்தோஷமாயிருக்க வேண்டுமென்ற எண்ணமிருக்கிறது. தமது சமூகத் திற்கு ஏதாவது செய்துவிட்டுச் செல்ல வேண்டுமென்ற ஆசையிருக்கிறது. 'என் உடல் இராது, ஆயினும் பெயர் நிலைக்குமாறு ஏதாவது செய்ய வேண்டுமெ'ன்ற ஆசை பல சமயங்களில் உண்டாகிறது. இதனால் தானம் செய்கிறான்; கோவில், சத்திரம், ஆஸ்பத்திரி ஆகியவை அமைத்து அவற் றுடன் தமது பெயரை இணைக்கிறான். இதே ஆசையினால் பிள்ளையில்லாத வன், பிறருடைய பிள்ளையை சுவீகாரம் எடுத்துக் கொள்கிறான். காளி தாசர், ரவீந்திரநாதர் முதலிய மஹா கவிகளோ, தமது இலக்கிய சிருஷ்டி களினால் சிரஞ்சீவிகளாயிருக்கிறார்கள். இந்தக் கீர்த்தியினால் அவர்க ளுடைய ஆத்மாவுக்குச் சுகம் கிட்டுகிறதோ, இல்லையோ தெரியாது. இவ்விதமாகத் தமது பெயரை நிலைக்கச் செய்யவும், வரும் சந்ததிகளுக்கு வழி காட்டவும் அவர்களுக்கு ஆசை யிருந்ததென்பதில் சந்தேகம் இல்லை. இந்த எல்லா முயற்சிகளிலிருந்தும், மனிதன் தமது வாழ்வைப் பற்றி மட்டுமல்ல, உலகில் மற்ற உயிர்களைப் பற்றி மட்டுமல்ல, தாம் இறந்த பின்னரும் உலகம், அதில் வாழும் சமூகங்கள் ஆகியவற்றில் கவலை கொள்கிறான் என்பது விளங்குகிறது. 'எனது தனி வாழ்வு முடிவெய்தும், ஆயினும் எந்தப் பரந்த உலக வாழ்வின் வெள்ளத்தில் நான் அழிவுறும் குமிழி போன்றவனோ, அது நிலை பெற்றிருக்கும்; ஆகவே நான் வாழ்வது; முக்கியமாக அதன் பொருட்டே யன்றி எனக்காகவல்ல நான் இறந்த பின்னரும் அந்த வாழ்க்கை கங்கை ஓடிக் கொண்டிருக்கும்; அது நன்கு அமைதியாக ஓடட்டும் என்பது என் விருப்பம்' என்பது போன்ற ஓர் உறுதி அவனுக்கு இருக்கிறது. இந்த உள்ளுணர்வின் தூண்டுதலினால் ஒரு தியாகி, தம் நாட்டிற்காகவோ மதத்தின் பொருட்டோ தம் உயிரை பலியிட்டு விடுகிறார். உலகை மாயை என்றும் மயக்கம் என்றும் கூறும் சங்கராசாரியாரும், 'நான் இறக்கவும், உலகை பிரளயம் கொண்டது.' என்ற கபீரைப் போன்ற பக்தர்களும், பின்னால் வரும் சந்ததிகள் சுகமாக சம்ஸார சாகரத்தைக் கடக்கட்டும், அவர்கள் அதிக இன்பமாக வாழட்டும், தூய்மை பெறட்டும் என்ற நோக்கங் கொண்டு பல நூல்கள் எழுதியும், ஸ்தாபனங்கள் அமைத்தும் உதவியிருக்கிறார்கள். தன் அக்கம்பக்கத்தி

ளுள்ளவர்களும், பின் சந்ததியாரும் அதிக சுகமாக வாழ்ந்து முன்னேற வேண்டுமென்ற ஆசையை, ஆஸ்திகர், நாஸ்திகர், உண்மையுள்ளவர், பொய்யர், முதலாளி, பொது உடைமைக்காரர், காந்தி வாதி, சுயநலமி, சுயநலமற்றவர், நாகரிகமுள்ளவர், நாகரிக மில்லாதவர், ஞானி, பக்தர் முதலிய யாவரும் இயற்கையிலேயே கொண்டிருக்கிறார்கள். விதவித மான துக்கங்கள், நோய்கள், அறியாமை, அநீதி முதலியவற்றில் பிணிப் புண்ட மனிதன், சுகம், ஆரோக்யம், அறிவு, நீதி, முக்தி ஆகியவற்றைப் பெற வேண்டும்—என்பதே தனி மனிதனுக்கும் சமூகத்திற்கும் இயற்கை யிலுள்ள நோக்கமென்பதை உணருங்கள். அப்பொழுது, ஏன் உயிர் வாழ வேண்டும், ஏன் இறக்கவேண்டும், எப்படி வாழ்வது, என்ன செய் வது என்பவையெல்லாம் விளங்கும். நமது வாழ்க்கை குறிக்கோளற்ற தாக ஆகாது.

9—4—45

## VI. தமிழ் நாடு கிளையின் சில முக்கிய விஷயங்கள்

[சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீ. ஜாஜூ தமிழ் நாட்டில் நடைபெறும் கதர் வேலைகளைப் பார்வையிட்டதன் பயனாக எழுதிய குறிப்புகள்.]

சென்ற சர்க்கா ஜயந்தியையொட்டி தமிழ்நாட்டுக்கிளை மொத்தத்தில் ஏறக்குறைய 1,40,000 சிட்டம்நூல் நன்கொடை பெற்றது. இதில் ஏறக்குறைய 45,000 சிட்டங்கள் வழக்கமாகக் கூலிக்குப் பதிவாக நூற்போரிடமிருந்து கிடைத்தன. அவர்களில் பலர் தம் கையால் நூற்று ஒவ்வொரு சிட்டம் அளித்திருக்கிறார்கள்; வேறு சிலர் இரண்டும், மூன்றும்கூடக் கொடுத்திருக்கிறார்கள். விஷயம் என்னவென்னில், ஏறக்குறைய 22,000 கூலிக்கு நூற்போர் இதில் பங்கெடுத்திருக்கின்றனர். எஞ்சிய 95,000 சிட்டங்கள் கதர் உடுத்தும் நகரவாசிகள், உற்பத்தி ஸ்தலங்களில் உள்ளோர் ஆகியோரிடமிருந்து கிடைத்தன. இவற்றில் 75 சதவிகிதம் சொந்தத்திலோ குடும்பத்திலோ நூற்றதாகவும், 25 சதம் விலைக்குவாங்கி அளித்ததாகவும் இருக்கலாம். 120 பேர் தலா 77 சிட்டங்கள் தாமோ, தம் குடும்பத்தினரோ நூற்றுக் கொடுத்திருக்கிறார்கள். மிச்சமுள்ள சிட்டங்கள் தலைக்கு 2 முதல் 5 சிட்டங்கள்வரை கொடுத்ததால் சேர்ந்தவை.

மேலேகண்டபடி ஏறக்குறைய 32,000 சிட்டங்கள் நன்கொடையாக வசூலானதன் பயனாக, நூல் நிபந்தனை அமலுக்கு வந்தும் கதர் விற்பனை பாதிக்கப் படாதது மட்டுமல்ல; இந்தக்கிளை சிறிது காலத்திற்குள்ளேயே நூலின் அளவை அரை அணுவிலிருந்து ஒரு அணுவாக்க முடிந்திருக்கிறது. இப்பொழுது கிளை மற்றொரு காரியமும் செய்து கொண்டிருக்கிறது. இதுவரையில் அதிக நூல் தருகிறவர்களுக்கும், தமது குடும்பத்தின் உபயோகத்திற்காக தம் நூலை நெய்வித்துப் பெற்றுக் கொள்வோருக்கும் 'கூபன்' அல்லது கார்டு, கொடுத்து வந்ததைச் சிறிது சிறிதாக நிறுத்திவருகிறது; சிறிது காலத்தில் முழுமையும் நிறுத்திவிடும். இவ்விஷயத்தில் கிளையின் காரணங்கள் பின்வருமாறு:—

(1) கதர் வாங்க வரும்பொழுது நூல் கொண்டுவரும் பழக்கம் ஜனங்களுக்கு ஏற்பட்டுவருகிறது. கதருக்கு ரொக்கக் கிரயம் கொண்டுவருவதுபோல், கணக்குப்படி நூலும் கொண்டுவரத் தொடங்கி விட்டனர்.

(2) கூபனுக்கு ஒருமிக்க அதிக நூல் தாவேண்டி யிருக்கிறது. ஆகவே தம் குடும்பத்தில் நூற்பதை விடுத்து வெளியில் விலைக்கு நூல் வாங்குமாறு தூண்டுதல் உண்டாகிறது.

(3) கூபன் உள்ளவர்கள் தம் உறவினர் நண்பர் ஆகியோரைத் தவிர, வேறு பொருள் முதலிய வகைகளில் தொடர்புள்ள பிறருக்கும் தம் கூபனை உபயோகிக்கத் தருகிறார்கள்.

(4) சுயதேவைப் பூர்த்திசெய்வோர் தம் தேவைக்கு வேண்டிய துணி களை நெய்வித்துக் கொள்வதுடன், மற்றத்தேவைகளுக்கு வேண்டிய கதர் வாங்கும் பொருட்டு ஒரு சிறு பகுதி நூலை ஒதுக்கி வைத்துக்கொள்ள முடியும்.

மேற்கூறிய காரணங்களுக்காகவும், கதர் விற்பனைக்கு ஒன்றும் குந்தகமில்லாமையாலும், கிளை, கதர் கூபன் அல்லது கார்டு தருவதை நிறுத்த விரும்புகிறது. இதன் விளைவு என்னவாகிற தென்று பார்க்க வேண்டும்.

சென்ற சில வருஷங்களில் கிளையின் கதர் உற்பத்தியின் விவரம் பின்வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| 1937 | 12 லக்ஷம் | | சதுர கஜம் |
| 1938 | 30 ,, | | ,, |
| 1939 | 25 ,, | | ,, |
| 1940 | 15 ,, | | ,, |
| 1941 | 33 ,, | | ,, |
| 1942 | 28 ,, | 50 ஆயிரம் | ,, |
| 1943 | 32 ,, | | ,, |
| 1944 | 25 ,, | 50 ஆயிரம் | ,, |
| 1945 | 23 ,, | | ,, |

1938 இல் கதர் உற்பத்தி மிகவும் பெருகிற்று. அதற்குக் காரணம் அப்பொழுது கிடைத்த அரசாங்க உதவியாகும். அதன் பிறகு 1943 இல் மீண்டும் உற்பத்தி ஓங்கிற்று. அதற்குக் காரணம் யுத்தத்தினாலுண்டான துணிக் கிராக்கியாகும். பிறகு நெசவுக்குள்ள வசதிகளை யொட்டி உற்பத்தி ஏறியும் இறங்கியு மிருந்திருக்கிறது. அத்தாக்ஷி பெறாத கதர் வியாபாரிகளினாலும் கிளைக்குக் கதர் உற்பத்தியில் தொந்தரவு விளைந்து கொண்டிருக்கிறது. ஆனால் நெசவுக்கும் விற்பனைக்கும் வசதி யிருந்தால் இந்தக் கிளையின் உற்பத்தியைப் பெருக்குவதற்குப் போதிய வசதிகள் இருப்பதாய்க் காண்கிறது.

விற்பனையைக் குறித்து கிளைக்கு விசேஷமாகக் கவலைப்படத் தேவையே யிருப்பதில்லை. இப்பொழுது இது முழுமையும் நிச்சயமாகும். **1945** நவம்பரில் கிளையிடம் ஏறக்குறைய 3 லக்ஷம் மதிப்புள்ள கதர் கைவச மிருந்தது. இதில் 1/3 பகுதி வெளுப்பதிலும் சாயமிடுவதிலும் அச்சிலு மிருந்தது, 1/3 வெளியில் அனுப்பப்பட்டு வழியிலும், எஞ்சிய 1/3 விற்பனை வஸ்திராலயங்களிலுமாக இருந்தது.

இதன் பொருள், ஒரு மாத விற்பனைக்குத் தேவையான அளவிற்குச் சரக்குக் கையிலிருந்தால் போது மென்பதாகிறது. சாதாரண சமயங்களில் விற்பனையைப் போல் 3 அல்லது 4 மடங்கு மதிப்புள்ள சரக்கு வஸ்திராலயங்களில் வைத்திருக்க வேண்டி யிருந்தது. இப்பொழுது அநேகமாக ஒரு லக்ஷ ரூபாய் சரக்கைக் கொண்டு லக்ஷ ரூபாய்க்கு விற்பனை செய்யலாம். வஸ்திராலயங்களில் விற்பனையினால் சரக்குக் குறையக் குறைய உற்பத்தி ஸ்தானங்களிலிருந்து வந்து கொண்டிருக்கலாம். இந்த நிலையை எய்தியதற்குள்ள காரணங்களில் ஒன்று, இப்பொழுது ரகங்களின் தொகை குறைந்து விட்டதுமாகும். முன்னர் இருந்தவைகளில் இப்பொழுது பேர்பாதி ரகங்களே உள்ளன. நவம்பரில் வஸ்திராலயங்களின் விற்பனை ஏறக்குறைய ரூ. 1,12,000-க்கு நடந்திருக்கிறது. தீபாவளி சமயத்தில் கிளையின் விற்பனை மிகவும் அதிகமாகிறது. நவம்பரில் விற்பனை மிகவும் குறைகிறது. சில வஸ்திராலயங்களில் டிஸம்பர் இறுதியில் இருந்த கையிருப்பும், மாதம் முழுவதிலும் நடந்த விற்பனையும் பின்வருமாறு :—

| பெயர். | கையிருப்பு. | விற்பனை. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| சென்னை (விற்காத கோட்டுத் துணி அதிக மிருந்தது) | 21,000 | 14,000 |
| கோயமுத்தூர் | 600 | 4,500 |
| திருச்சி | 7,000 | 5,000 |
| கும்பகோணம் | 8,000 | 4,500 |
| காரைக்குடி | 4,000 | 3,900 |

மேற்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து, கிளைக்கு நூல் நிபந்தனையினால் தொந்தரவொன்றுமில்லை யென்பது விளங்கும். நகரங்களில் கூலிக்கென இன்றி வெகுவாக நூற்பு நடைபெறுவதால் உதவியாளர், சுயதேவைப் பூர்த்தி செய்வோர் ஆகியோரைச் சேர்ப்பதற்கு நல்ல வசதியிருக்கும். இந்த நல்ல நிலைமையை எய்துவதில், கிளை செய்துள்ள பிரசாரமும், நேர்த்தியான திரிகள், ராட்டை முதலிய கருவிகள் தயாரித்துத் தருவதும், பெரிதும் உதவியுள்ளன வென்று கூற வேண்டும்.

முயன்றால் கிராமங்களிலும் அதிகமாகக் கதர் விற்கலாம். ஆனால் நகரங்களில் கதருக்குள்ள கிராக்கி மிகவும் அதிகமாயிருப்பதால், கிராமம் நகரம், ஆகிய இரண்டின் தேவைகளையும் பூர்த்தி செய்வது கிளைக்கு அசாத்தியமாகிக் கொண்டிருக்கிறது. கிராமங்களில் நூற்போருக்குத் தமக்குத் தேவையான துணிகளை அக்கம்பக்கத்திலுள்ள நெசவாளரைக் கொண்டு நெய்விக்கும் பழக்கம் இன்னும் உண்டாகவில்லை.

வஸ்திராலயங்களில் கை யிருப்புப் புத்தகம் ஒழுங்காக வைத்திருப்பது தமிழ் நாட்டின் சிறப்பான அம்சமாகும். இப்பொழுது ரகங்கள் குறைந்துவிட்டதால் கை யிருப்புக் கணக்கு வைத்துக் கொள்வது மேலும் சுலபமாகி விட்டது. இதைத் தவிர கிளை தனது பெரிய வஸ்திராலயங்களில் கையிருப்புக் கார்டு முறையை அனுஷ்டிக்கத் தொடங்கியுள்ளது. இந்தக் கார்டுகளில் 'காலம்' ஒன்றையொன்று ஒட்டி அமைக்கப்பட்டிருக்கிறது; ஒரு கார்டு பூர்த்தியாகிவிட்டால் அதற்குப் பிரதியாக புதிய கார்டு வைக்கப்படுகிறது. அந்தக் கார்டுகள் இரும்புத் தகடுகளுள் செருகப் பட்டிருக்கின்றன. ஒரு வகையில், இது திறந்த காகிதமுள்ள அட்டை போல் இருக்கிறது. இதில் உள்ள அனுகூலம் என்னவெனில் பெரிய வஸ்திராலயங்களில் இருப்புக் கணக்குக்காக தூக்கமுடியாத புத்தகங்கள் வைத்திருப்பதற்கு பதிலாக லேசான தனிக் காகிதங்களைக் கொண்டே வேலை நடந்துவிடுகிறது. காகிதங்கள் பூட்டுச்சாத்தில் வைக்கப்படுகின்றன.

M7K N46

தமிழ் நாட்டுச் சகோதாரின் கணக்குத் திறமை பிரசித்தமானது. கிளையின் எல்லாக் கணக்குப் புத்தகங்களும் அழகிய குண்டு குண்டான எழுத்துக்களில் நேர்த்தியாக எழுதப்படுகின்றன. உண்மையில் கணக்குப் புத்தகங்களில் எங்கும் அடித்தல் திருத்தம் முதலியன இருத்தலாகாது. இவ்விஷயத்தில் நல்ல திறமை காணப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன் கிளை ஏறக் குறைய 3 லக்ஷம் ரூபாய்க்கு பருத்தியும், பஞ்சும் வாங்கிக் கையிருப்பில் வைத்திருக்க வேண்டி யிருந்தது. வருஷாந்திர உற்பத்தி ரூ. 30 லக்ஷத்திற்கு நடைபெறும் பொழுது இந்தக் கையிருப்பை அதிகமென நினைக்க முடியாது. ஆனால் இப்பொழுதுள்ள ஏற்பாட்டின்படி வருஷம் பூராவிலும் 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் பருத்தி—பஞ்சு கையிருப்பில் வைத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்படுவதில்லை. இதற்கு முக்கியக் காரணம், கிளையின் முயற்சியின் பயனாக நூற்போரில் பலர் தம் தேவைக்கான பருத்தியைத் தாமே தேடி வைத்துக் கொள்ளத் தொடங்கி யிருப்பதேயாகும்.

113712

## VII. ராட்டையும் ராஜரீகமும்

[மோ. க. காந்தி.]

கேள்வி : இப்பொழுது இந்தியா முழுமையும் மாகாண, மத்தியச் சட்டசபைத் தேர்தல்கள் நடைபெறப்போகின்றன. இத்தேர்தல்களுக்குள்ள மதிப்பு நீங்கள் அறிந்ததே. சட்டசபைத் திட்டத்தை இதுவரைச் சட்டை செய்யாதிருந்த சர்க்கா சங்கத்தின் ஊழியர்களும், இப்பொழுதையத் தேர்தல்களுக்கு மதிப்பளிக்கிறார்கள். போதிய ராஜீய அறிவு படைத்த ஊழியர்களுக்குத் தேர்தல் போராட்டத்தில் சிக்காதிருப்பது கஷ்டமாயிருக்கிறது. சர்க்கா சங்கத்தின் விதிப்படி, அவர்கள் நேரிடையாக ராஜீய வேலையில் ஈடுபடாமலிருக்க வேண்டுமாகையால், அவர்கள் பெரிய சிக்கலில் தாம் அகப்பட்டிருப்பதாக நினைக்கிறார்கள். மற்ற மாகாணத்தின் ஊழியர்களும் இவ்வாறே நினைப்பார்கள் என்று எண்ணுகிறேன்.

ஆகையால், சர்க்கா சங்கத்தில் இருந்துகொண்டே, ஊழியர்கள் தேர்தல் போராட்டத்தில் கலக்கலாமா, கூடாதா வென்பது தெளிவாகும்படி, இந்தச் சந்தேகத்தைத் தயவுசெய்து விளக்குமாறு வேண்டுகிறேன். ஊழியர்களை எந்தக் கட்டுபாட்டிற்கும் உட்படுத்தாமல், இதில் கலந்துகொள்ள தயவு செய்து அனுமதிக்க வேண்டுமென்பது என் வேண்டுகோள். சங்கத்தின் வேலை நேரம் போக எஞ்சிய நேரத்தை அவ்வாறு செலவிடலாம் என்பதே என் கருத்து. வஸ்திராலயத்தின் வேலை நேரத்தில், அதன் வேலைகளைத்தவிர வேறு வேலை செய்ய விரும்பவில்லை''.

பதில்:—சர்க்கா சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீ. ஜாஜூவுக்கு ஓர் கதர் ஊழியரிடமிருந்து மேற்கண்ட கடிதம் கிடைத்திருக்கிறது. ஸ்ரீ. ஜாஜூ அதை என்னிடம் அனுப்பியிருக்கிறார். அனுப்பியதன் நோக்கம் நான் இந்தப் பிரசினையைக் குறித்து 'காதி—ஜகத்'தில் சர்ச்சை செய்து என் அபிப்பிராயத்தை வெளியிட வேண்டு மென்பதாகும். சர்க்கா சங்கம் சிறிய ஸ்தாபனமல்ல; இன்று அதன் ஊழியர்கள் அல்லது சேவகர்கள் இந்தியா முழுவதிலும் இருக்கிறார்கள், அவர்களுடைய தொகை 3000 ஆகும். இந்தத் தொகை மிகச் சிறிதென்பதே என் எண்ணம். கதர் இந்தியாவில் பரவிவிட்டால் இத்தொகையும் வெகுவாக வளரவேண்டும். ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு ஊழியர் கிடைத்தாலும் சர்க்கா சங்கத்தின் காரியாலயத்தில் 7 லக்ஷம் பெயர்கள் பதியப்பட்டிருக்க வேண்டும்.

இதற்கு ஏராளமான பணம் தேவை. இதைக் கேட்டு பயந்து இத்தனை ஊழியர் இருப்பது சாத்தியமல்லவென்று யாரும் எண்ணவேண்டாம். நான் என்றும் அவ்வாறு எண்ணியதில்லை. காரியம் நல்லதாயிருந்து, அதைச் செய்ய மக்களிடம் ஊக்கமும் உண்டாயின் பணம் தானாகவே வந்து சேருகிறது. ஆயுள் முழுவதிலும் நான் ஸ்தாபனங்கள் நிறுவுவதும், அவற்றை நடத்துவதுமே செய்து வந்திருக்கிறேன். பணம் இல்லாமையால் முறிந்து போயிற்றென்றோ, குறுகிவிட்டதென்றோ ஒன்றைப் பற்றியும் கூறமுடியாது. ஆனால், ஊழியர் இல்லாமையால் ஸ்தாபனங்கள் அழிந்ததையும், குறுகிக் கருகியதையும் நான் அனுபவத்தில் கண்டதுண்டு. இதை மறுத்து 'பெரிய பெரிய தொழிற்சாலைகள் நடைபெறுகின்றனவே, சர்க்கார் ஊழியத்தில் மக்கள் சேர்ந்துகொண்டே யிருக்கிறார்களே, இவை யெல்லாம் பணத்தினாலல்லவா?' வென்று, சிலர் கேட்கலாம். மேலே கூறியதை, நன்கு உணராதவர்களே இவ்வாறு சந்தேகம் அடைவார்கள். பணத்தினால் ஆவது ஒன்றுமில்லை யென்று நான் சொல்லவில்லை. பணத்தினால் ஒன்றும் நடைபெறவில்லையானால் நாம் பணத்திற்கு அடிமையாவது என்? பணமில்லையேல் நாம் முன்னேறவே இயலாதென்றும் கூறுவேன். ஆனால் பணத்திற் கடிமையாவதென்றால், மக்களுக்கு ஊழியம் என்பதை விட்டுவிட வேண்டும், அடிமைகள் தலையில் எழுதியது நசுக்குறுவதே, என்று கூறுவேன். பணத்தை நமது அடிமையாகக் கருதி, உபகரணமாய் எண்ணி ஊழியம் புரியும் நோக்குடன் அதை உபயோகித்தால், அதை நன்கு பயன் படுத்தியவராவோம். ஊழியம் புரிய வேண்டுமானால், நம்மால் தவிர்க்க வியலாத முதல் தேவை மனிதனேயாகும்; அத்தகைய ஊழியர்கள் கிட்டுவரேல், பணம் அவரைத் தேடிக் கொண்டு ஓடிவரும். இத்தகையோர், பணத்தைத் தேடிக்கொண்டு எங்கும் செல்ல வேண்டியதில்லை. இதனால், ஏழு லக்ஷமோ, அதிலும் அதிகமாகவோ ஊழியர் கிட்டினால், பணம் நமது பையில் இருப்பதாக நினைக்கலாம் என்று கூறினேன். ஆசைகாட்டி, ஆகர்ஷிக்கக் கூடியவாறு நம்மால் பணம் தரமுடியாதென்று கூறலாம். நான் இதை ஒப்புகிறேன். இங்கே உணர்ச்சியே முக்கியம். சர்க்கா சங்கத்தைப் போன்ற பாரமார்த்திக ஸ்தாபனத்தில் சேர வருவோர், சேவை நோக்குடன் வருவாரேயன்றி, மாதச் சம்பளத்திற்காக வரார். பணக்காரர்களைப் போலவே ஏழைக்கும் சாப்பாடு தேவையா யிருப்பதால், மாதச் சம்பளம் பெறத்தான் பெறுகிறார்கள்; ஆனால் பெறுவது உயிர் வைத்திருப்பதற்கும், ஊழியத்திற்குத் தேவை

யான சக்தியுடன் இருப்பதற்குமேயாகும். இத்தகைய ஊழியர், சுகத்திற்காக உண்ணவோ, உடுக்கவோ செய்யார்.

சர்க்கா சங்கத்தின் ஊழியர் இவ்வாறு இருப்பரேல், அவருக்கு ராஜரீக வேலைகளுக்கு நேரமே கிட்டாது. சர்க்காச் சங்கத்தின் காரியாலயத்தில் 8 மணிநேரம் செலவு செய்தபின், எஞ்சிய நேரத்தை, மனத்திற்குகந்த வேறு வகைகளில் செலவழிப்ப தென்றால், சர்க்கா சங்கத்தின் வேலையே நடைபெறாது; ஏனெனில் சர்க்கா சங்கத்தை ஆக்குவதோ அழிப்பதோ அவர்கள் கையில் இருக்கிறது. ஆகையால் 8 மணிக்குப் புறம்பான நேரத்தையும், அதற்கு வேண்டிய ஆற்றலைப் பெருக்கிக்கொள்வதிலேயே கழித்தல் வேண்டும். உதாரணமாகக் கதர் உற்பத்தியின் பல பகுதிகளைப் பயிலல், கதர் சாஸ்திரத்தைக் கற்றல், இன்னும் செய்யவேண்டியவற்றைத் திறம்படச் செய்தல், முதலியன.

இதன் பொருள், சர்க்கா சங்கத்தில் பணிபுரிவோருக்கு ராஜரீகத்திலோ, வேறு விஷயங்களிலோ, ருசியில்லை யென்பதல்ல. ருசியுண்டு, ருசியிருத்தல் அவசியமும் ஆகும். ஆனால் அதை வரம்புக்குள்ளாக்கி, சர்க்கா சங்கத்தின் மூலமாகவே அதை வளர்க்கவும், நுகரவும் செய்கிறார். அப்பொழுதுதான் அவர் உண்மையான ராஜரீகத்தை உணர்ந்தவராகிறார். அவர் உண்மையான வோட்டளிப்பவராவார், காங்கிரஸின் சார்பில் நிற்பவருக்குத் தமது வோட்டை அளிப்பார். ஆனால் பிறருக்குப் போதித்து வோட்டுச் சேர்க்கும் தொந்தரவை ஏற்கமாட்டார். அதற்கென நடைபெறும் கூட்டத்தில் சொற்பொழிவு ஆற்றார். காங்கிரஸின் வேலையும், பொதுமக்களின் வேலையும் ஒன்றே. காங்கிரஸ் பொதுமக்களுடையதே. காங்கிரஸ் சர்க்கா சங்கத்தை அமைத்தது; சர்க்கா சங்கமும் மக்களுடையதே. ராஜரீகம் காங்கிரஸுடையதா யிருப்பது போன்று, சர்க்கா சங்கமும் காங்கிரஸுடையதேயாகும். ஒரே மனிதன் இரண்டு குதிரைகளின் மீது எவ்வாறு சவாரி செய்வது? சர்க்கா சங்கத்தில் சேருவோர் தமது முழு நேரத்தையும் சர்க்கா சங்கத்தின் வேலையிலேயே கழிக்கட்டும். ராஜரீகப் பணிபுரிவோர், அதையே செய்யட்டும். இவ்வாறு இருவரும் தமக்குள் வேலையைப் பாகுபாடு செய்து கொள்வதால் பரஸ்பரம் பூர்ண உதவி புரிந்தவராவார். சர்க்காசங்கத்தின் ஊழியம் புரிவோர் ராஜரீக வேலையில் நேரிடையாக ஈடுபடலாகா தென்ற சர்க்கா சங்கத்தின் விதிக்கு எது மூலகாரணமோ அதையே நான் விவரித்திருக்கிறேன்.

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS 7-DEC 1946

# VIII: பாதுகாப்புத் தத்துவம்

[கி. க. மஷ்ரூவாலா]

காந்தியடிகளின் 'பாதுகாப்பு' (trusteeship)த்தத்துவத்தைப் பற்றி அடிக்கடி சந்தேகங்கள் கேட்கப்படுகின்றன. இதில் புரிந்துகொள்வதற்கு சிரமமுள்ள எதையும் நான் காணவில்லை. நமது தினசரி வாழ்க்கையில், அனேகச் சொந்த வேலைகளிலும், பொதுக்காரியங்களிலும் இதை அனுஷ்டிக்கிறோம், பார்க்கிறோம்.

ஹிந்துக்களின் கூட்டுக் குடும்பத்தைப் பாதுகாப்புத் தத்துவத்தின் ஓர் வகையென்று சொல்லலாம். கூட்டுக் குடும்பத்தின் சொத்தின்மீது, குடும்பத்தின் எந்தத் தனி நபருக்கும் உரிமை இல்லை. நிலம், வீடு, நகை துணி முதலிய வீட்டின் மற்றப் பொருள்களை அவரவர் சௌகரியத்தின் பொருட்டு தனித்தனியாக உபயோகித்து வந்தாலும், அது யாருக்கும் சொந்தமானதல்ல. ஸ்திரீதனத்தைத்தவிர, மற்றவைகளில் ஒரு கிண்ணமும் யாருக்கும் தனியாகச் சொந்தமல்ல. சொத்தைக் காத்துப் பெருக்குவதற்காகவும், பிறரோடு காரியங்கள் நடத்துவதில் உள்ள சௌகரியத்திற்காகவும், சட்டம் ஒப்பும் வழக்கப்படி, குடும்பத்தின் தலைவனுக்கு மற்றெல்லோரையும்விட அதிகமான அதிகாரங்கள் உண்டு. ஆனால், அதிகாரம் எவ்வளவிருப்பினும், சட்டப்படி அவர் சொத்தின் உரிமையாளராக மதிக்கப்படுவதில்லை. குடும்பத்தின் சொத்தின்மீது மட்டுமல்ல, தனி அங்கத்தினரின் வருமானத்தின் மீதும், அவருக்குச் சட்டப்படி எத்தகைய அதிகாரமும் இல்லை. ஒரு சகோதரர் மாதம் ரூ. 500/— சம்பாதிக்கிறார், மற்றொருவர் ரூ. 50/— தான் சம்பாதிக்கிறார் என்றால், அவற்றை அனுபவிப்பதில் அவர்கள் இருவருக்கும், அவர்களுடைய மனைவிகள் குழந்தைகளுக்கும் ஒரே வகையான உரிமையே உண்டு. 500 ரூ சம்பாதிப்பவருடைய மனைவி ஜரிகைச்சேலை யுடுத்தி நகைகளைச் சுமந்து கொண்டும், வீட்டில் வேலை யொன்றும் செய்யாமலும், அவளுடைய பிள்ளைகள் வண்டியிலும் குதிரையிலும் சவாரி செய்துகொண்டு மிருக்க, மற்றவனுடைய குழந்தை குட்டிகள் ஏழையைப்போல் வாழ்வது என்பது எங்கேனும் காணப்பட்டாலும்—இது அநாகரிகம், குடும்பத்திற்குப் பொருந்தாதது என்று கூறப்படும்.

பாதுகாப்புத் தத்துவம் சிறிய அளவில் அனுஷ்டிக்கப் படுவதற்கு இது உதாரணமாகும். பல நூற்றாண்டுகளாக இது நடைபெற்று வந்தது,

இதுவரையில் இதில் யாதொரு சிரமமும் இருப்பதாய்த் தோன்றவில்லை. ஆனால் சென்ற நூறு வருஷங்களாக, போகங்களைப் பெருக்கிப் பணத்தை வணங்கும் புதியகாலம் நடைபெறத் தொடங்கவே, அது சொந்த சுகத்தையும், சுயநல ஆசையையும் மிகவும் பெருக்கி விட்டதால், கூட்டுக் குடும்ப வாழ்க்கை சிரமமாகத் தோன்ற ஆரம்பித்துவிட்டது. இயந்திர சாலைகள், வியாபாரம், வக்கீல் தொழில், டாக்டர் வேலை முதலியவை களுடன் கூடிய இக்காலத்திற்கு முன், ஒரு சகோதரன் மாதம் ரூ. 500/ உம் 1000 உம் சம்பாதிப்பதும், மற்றொருவன் ரூ. 20, 25 வாங்குவதும் சாத்தியமில்லாதிருந்தது. ஆகையால் நான் அதிகம் சம்பாதிக்க என் சகோதரன் ஏன் செலவழிக்க வேண்டுமென்று எண்ணுவதற்கோ, என் கணவர் சம்பாதிக்க என் மைத்துனரின் பிள்ளைகள் ஏன் செலவு செய்ய வேண்டுமென்று கேட்பதற்கோ அதிக இடமில்லாதிருந்தது. குடும்பம் சிறிய அளவில் பொது உடமை ஸ்தாபனமாயிருந்தது. அது தனியுடமைக் காலத்தில் தகரத் தொடங்கிவிட்டது.

நாம் அஹிம்சையின் மூலமாகப் பொதுவுடமையைக் கடைப்பிடிக்க வேண்டுமெனில், பாதுகாப்புத் தத்துவமே அதற்குத் தலைசிறந்த சாதன மாகக்கூடும். கிராமம் முதல், அகில தேசமும் ஓர் பெரிய குடும்பமே யாகும். நபர்களோ, குடும்பங்களோ தனித்தனியாக வாழ்ந்து உண்டுடுப் பதும், வெவ்வேறு தொழில் புரிவதும் சௌகரியத்திற்கான விஷயங்க ளாகும். இதனால் அவர்களுடைய வருமானம், சொத்து ஆகியவற்றிலோ, அடையும் சுகங்களிலோ வேறுபாடு உண்டாகக் காரணமில்லை. ஆனால் வெவ்வேறு தொழில்கள் புரிந்தால், தொழிலாளரின் வருமானங்கள் ஒன்றிற்கொன்று வெகுவாக வேறுபடுதல் சாத்தியமே. உதாரணமாக லாபத்தின் தரம் ஓரேமாதிரி யிருப்பினும், கள்ளுக்கடையின் லாபம், அவ னுடைய சகோதரனுடைய கடையைவிட அதிகமாகவேதான் இருக் கும். அதாவது, கள்ளுக்கடைச் செல்லத்தில் அதிகப் பணம் சேர்ந்து கொண்டுதானிருக்கும். ஆகையால் கள்ளு வியாபாரி பணக்காரனாய் விட, அவன் சகோதரன் ஏழைமையிலேயே தம் நாட்களைக் கழிப்பதா? மேலும் வெவ்வேறு தொழில்களுக்கு வேண்டிய முதலிலும் வேறு பாடிருக்கும். உலோகப்பொருள் உற்பத்தி செய்து விற்கும் கடைக்கு அதிகமான முதல் தேவையாகும். தச்சுப் பட்டறைக்கு அவ்வளவு தேவையில்லை. மக்களின் நன்மையைக் கவனிக்கும்பொழுது தச்சன், உலோக வேலைக்காரன், சக்கிலி யாவரும் தேவையே.

இதில் தூய வழி இதுவேயாகும்: அதாவது ஒவ்வொரு மனிதனும் தான் எந்தத் தொழில் புரிந்தாலும் சரி, எத்தனை முதல் போட்டிருந்தாலும் சரி, அந்த முதலுக்கோ அதிலிருந்துவரும் வருமானத்திற்கோ தான் உரிமையுள்ளவனல்ல வென்று அறிந்து கொள்ளவேண்டும். அவன் அதற்கு ஓர் 'நிர்வாஹி'யே யாகும்; ஒரு கூட்டு ஸ்தாபனத்தின் நிர்வாஹியைக் காட்டிலும் அவனுக்கு அதிகமான உரிமைகள் இருக்க முடியாது. நிர்வாகியைப்போல் அவன் கணக்கு வழக்குகள் வைத்திருக்க வேண்டும்; முதலையும் வருமானத்தையும் யாவரும் சமமாக உபயோகிக்க வேண்டும்...சக்கிலி, தச்சன், தட்டான், வக்கீல், சேவகன் ஆகிய யாவரும் சமூகத்தின் தேவைகள் தம்தம் ஆற்றல் ஆகியவற்றையொட்டி ஊழியம் புரிந்தாலும், ஒரு தொழில் அதிக வருமானமளிப்பதென்றும் மற்றொன்று குறைந்த வருமானம் தருவதென்றும் இருத்தலாகாது. அதிக வருமானமெல்லாம் எல்லோருக்கும் பயன்படவேண்டும். ஒவ்வொருவனும் சமூகமும் சட்டமும் ஒப்பும் அளவிற்கே தன்னிடம் வைத்துக்கொள்ள வேண்டும். இத்தகைய பொருள் நிலையை அமைத்தலே பாதுகாப்புத் தத்துவத்தை அனுஷ்டிப்பதாகும்.

இது உண்மையில் மக்களுக்கு அனுபவமேயில்லாத புதிய விஷயமல்ல. குழந்தைகளின் போஷகர், மைனர்களின் கார்டியன், கோயில் சத்திரம் தர்க்கா ஆகியவற்றின் பஞ்சாயத்து, பொது ஸ்தாபனங்களின் பொக்கிஷதாரன், காரியதரிசி முதலியோர், ஸ்தல ஸ்தாபனங்கள், முனிசிபாலிடிகள் ஆகியவற்றின் அங்கத்தினர் நிர்வாகிகள் முதலியோர் லட்சக் கணக்கில் ரூபாய் வருவாய், சொத்து ஆகியவற்றின் மீது அதிகாரம் செலுத்துகிறார்கள்; ஆனால் யாரும் அவர்களை அவற்றின் சொந்தக்காரர்களெனக் கருதுவதில்லை; அவர்கள் தமது வேலையை உண்மையுடனும் திறமையாகவும் செய்யாவிடில் தமது பதவியிலிருந்து அகற்றப்படலாம். அவர்கள் தம் அதிகார வரம்பிற்குட்பட்டு வேலையைத் திறமையாகவும் நேர்மையுடனும் செய்து கொண்டிருக்கும் வரையில் தான் சட்டம் அவர்களுக்கு உதவும்.

இதே சட்டத்தை சமூகம் முழுமையும், சொத்தின் மீது உரிமை பெற்றுள்ள ஒவ்வொரு நபர் மீதும் பிரயோகிப்பதே 'பாதுகாப்பு'த் தத்துவமாகும். இதில் யாருடைய கையிலிருந்தும் எந்த சொத்தையும் முதலில் அபகரிக்கத் தேவையில்லை. பொதுஜன அபிப்ராயம், சட்டம் ஆகியவற்றின் பலத்தைக் கொண்டு இந்தத் தத்துவத்தை முதலில் சமூகத்

தில் அமலுக்குக் கொணர வேண்டும்; அதை அனுசரித்து நடப்பவன் தன் தொழிலை நடத்த அனுமதி பெறுவான்; அனுசரிக்க விருப்பமில்லாதவனோ, போஷகன், நிர்வாகி அல்லது பஞ்சாயத்தின் அங்கத்தினனைப் போல் விலக்கப்படக் கூடும்.

ஆனல் ஒரு பெரிய விஷயத்தை அறிந்து கொள்ளல் வேண்டும். அதை நாம் புரிந்து கொள்ளாவிடில், சட்டமும் தத்துவமும் வீணுகும். அது விழிப்புள்ள மக்களாகும். ஒருவருக்கொருவர் விரோத முள்ளவர்களும், தமது கடமையில் சோர்வுள்ளவர்களும், தம் உரிமைகளை அறியாதவர்களும், அறியாமை, சோப்பல் ஆகியவற்றினல் கிடைத்ததில் திருப்தியுறுகிறவர்களும் பொதுவுடமை முறையினலோ, காந்திய முறையினலோ சுகமெய்த வியலாது. கணக்குச் சரியாவென்று பார்ப்பதே சிரமமென்று கருதுகிறவர்களும், முனிசிபாலிடியின் நடவடிக்கைகளில் கவனமே செலுத்தாத நகர வாசிகளும், பஞ்சாயத்தின் நிர்வாகத்தில் ருசியேயில்லாத கிராம வாசிகளும், நாணயமோ, திறமையோ இல்லாத அதிகாரியை எவ்வாறு அகற்ற முடியும்? சட்டம் இருந்தும், அதை அமலுக்குக் கொண்டு வரும் மக்கள் இல்லையேல் சட்டத்தினல் என்ன ஆகும்?

பாதுகாப்புத் தத்துவம் எல்லாவகைப் பொருளாதாரத் திட்டங்களிலும் பொருந்தக்கூடிய பரந்த தத்துவமாகும். முதலாளித்வம், பொது உடமை, நாஜி முறை, காந்தீயம் முதலிய எல்லாப் பொருளாதார முறையிலும் அதை உபயோகிக்கலாம். ஆனல் மக்கள் சோம்பேறிகளாயிருந்தால் எத்தகைய முறையும் அவர்களுக்கு சுகத்தையோ, சுதந்திரத்தையோ அளிக்க முடியாது. முடிவில், பாதுகாப்புக் தத்துவத்தைச் சுருங்க விளக்கி இந்தக் கட்டுரையை முடிக்கிறேன்:

1. பாதுகாப்புத் தத்துவமென்பது இன்றைய முதலாளித்துவப் பொருளாதார முறையை, பொதுஜன நிர்வாகத்திற்கு மாற்றுவதற்குரிய வழியாகும். அது முதலாளித்துவத்தை நிலை நிறுத்துவதல்ல; ஆனல் இன்றைய முதலாளிகள் மக்களுக்கனுகூலமான முறையில் மாறுவதற்கான சந்தர்ப்பம் அளிக்கிறது.

2. சமூகம் ஒவ்வொரு மனிதனுக்கும் எவ்வளவு சொத்திருப்பது சரியென்று கருதுகிறதோ, அந்த அளவு சொத்தின் மீதே ஒவ்வொருவனுக்கும் உரிமையுண்டு.

3. பாதுகாப்புத் தத்துவத்தை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரும் பொருட்டு சட்டத்தின் உதவியை நாடத் தேவையே இல்லை என்ப தொன்றுமில்லை.

4. அதில், பொதுநலத்தைப் பொருட்படுத்தாமல், எந்த மனிதனுக்கும் தன் கையில் சிக்கியுள்ள பொருளை உபயோகிக்க அதிகாரமிருக்க முடியாது.

5. ஒவ்வொரு மனிதனுக்கும் குறைந்தது எவ்வளவு ஊதியம் கிடைக்க வேண்டுமென்பதை நிர்ணயிப்பது எவ்வாறு அவசியமோ அவ்வாறே அதிகமான அளவையும் நிச்சயம் செய்யவேண்டும். இந்த இரு வருமானங்களுக்கும் இடையிலுள்ள வேற்றுமையைச் சிறிது சிறிதாகக் குறைக்க வேண்டும். எல்லோருக்கும் ஒரே வகையான ஊதியம் இருப்பதே ஆதர்ச நிலையாகும். அது ஏற்படாவிட்டாலும் வரம்புக்குட் படாத தனி வருமானம் கூடாது.

6. எந்தப் பொருள் எந்த அளவில் உற்பத்தி செய்யப்படவேண்டுமென்பதை, பொது நலனைக் கருத்திற் கொண்டு நிர்ணயிக்க வேண்டும். தனி மனிதனின் வினோதம், ஆசை, புலனின்பம் ஆகியவற்றைப் பெருக்கும் நோக்கோடு பொருளுற்பத்தியாவதை அனுமதித்தலாகாது.

ஸேவாகிராமம்.
10—12—45

## IX. கண் காட்சி எப்படி யிருக்க வேண்டும்?

[மோ. க. காந்தி]

காங்கிரஸை யொட்டி நடைபெறும் கதர்க் காட்சி, கிராமநோக்குடன் கருதும்பொழுது, எப்படி இருக்க வேண்டும்? கிராமங்கள் வாழ்வதோடு மட்டுமல்லாமல், பலம் பெற்று செல்வமும் சிறப்பும் பெற்றுத் திகழ வேண்டுமெனில், கிராம நோக்கே இந்தியாவுக்குச் சரியான நோக்காகும். இது சரியென்ருல், நமது கண் காட்சியில் நகரத்தின் பொருள்களுக்கும் ஆடம்பரச் சாமான்களுக்கும் இடம் இருக்க முடியாது. நகரத்தில் வழங்கும் ஆட்டக் கேளிகளுக்கும் அவசியமிருத்தலாகாது. எவ்வகையிலும் கண் காட்சி விநோதத்திற்கோ, பண வருவாய்க்கோ உதவும் சாதன மாக ஆகலாகாது. வியாபாரிகளிடம் விளம்பரச் சாதனங்களுக்குக் குறைவில்லை. அங்கே விற்பனை நடைபெறக் கூடாது. கதரும், பிற கிராமக் கைத் தொழிற் பொருள்களையும்கூட விற்கக்கூடாது. கண் காட்சி போதனை பெறுவதற்குரிய இடமாயிருத்தல் வேண்டும், வசீகர மாயிருத்தல் வேண்டும். கிராம வாசிகள், தம் வீடு திரும்பியதும் ஏதேனு மோர் தொழில் புரிவதன் அவசியத்தை உணர்த்துவதா யிருத்தல் வேண் டும். இந்தியாவின் எல்லாக் கிராமங்களிலும் உள்ள குறைபாடுகளைக் காட்டி அவற்றைப் போக்குவதற்குரிய உபாயங்களை விளக்குவதாயும், கிராமாபிவிருத்திக்கான முயற்சிகள், தொடங்கியது முதல் இதுவரையில் நடந்துள்ள வேலைகளைக் காட்டுவதாயு மிருக்க வேண்டும். கிராம வாழ்க் கையை கலைப்பண்புள்ளதாக எவ்வாறு செய்வதென்பதைக் காட்டுவ தாகவும் இக் கண்காட்சி யிருக்க வேண்டும்.

இந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவல்ல கண்காட்சி யெப்படி இருக்குமென்பதைப் பார்ப்போம்.

(1) இரண்டு வகையான கிராமங்களின் முன்மாதிரிகள் அமைக்கப் பட வேண்டும்—ஒன்று இப்பொழுதுள்ள கிராமத்தைக் காட்டுவது, மற்றதோர் திருந்திய நிலையிலுள்ள கிராமத்தினுடையது. திருந்திய கிரா மம் சுத்தமாயிருக்கும்;—வீடுகள், சாலைகள், அக்கம் பக்கங்கள், வயல்கள் எல்லாம் சுத்தமாயிருக்கும். கால் நடைகளின் நிலையும் காட்டப்பட வேண்டும். எந்தெந்தக் கைத்தொழிலினுல் எவ்வளவு வருமான முண்

டாரு மென்பதையும், புள்ளிகள், சித்திரங்கள், புத்தகங்கள் ஆகியவற்றி னால் விளக்க வேண்டும்.

(2) பல்வகைக் கிராமக் கைத்தொழில்களையும் நடத்தும் விதமும், அவைகளுக்கான கருவிகள் கிடைக்குமிடங்களும், அவற்றைச் செய்யும் முறையும் தெரிவிக்கப்பட வேண்டும். எல்லாக் கைத்தொழில்களையும் செய்துகாட்ட வேண்டும். இவற்றுடன் கீழே கண்டவைகளையும் கூற வேண்டும்.

(அ) கிராமத்திற் குகந்த சிறந்த உணவு.
(ஆ) இயந்திரத் தொழிலையும் குடித் தொழிலையும் ஒப்பிடுதல்.
(இ) பசுவளத்தலைப் பற்றிய சாஸ்திரீய அறிவு.
(ஈ) கக்கூஸ்களின் முன்மாதிரிகள்.
(உ) கலைப்பகுதி.
(ஊ) தழை எருவும் ரஸாயன எருவும்.
(எ) பசுவின் தோல், எலும்பு ஆகியவற்றின் உபயோகம்.
(ஏ) கிராமப் பாட்டு, வாத்தியம், நாட்டியம் ஆகியவைகளை விளக்கிக் காட்டல்.
(ஐ) கிராம விளையாட்டு, குஸ்தி, தேகாப்பியாசம்.
(ஒ) புதிய கல்வி.
(ஓ) கிராம மருந்துகள்.
(ஔ) கிராம மருத்துவ முறை.

தொடக்கத்தில் கூறப்பட்ட நோக்கத்தைக் கருத்திற்கொண்டு, ஆன திருத்தங்களைச் செய்க. நான் கூறியவற்றை உதாரணங்களாக மட்டும் கருதவேண்டும். இதில் ராட்டையையும், பிற தொழில்களையும் வேண்டு மென்றே கூறவில்லை. இத்தொழில்களில்லாத கண்காட்சி பயனற்ற தென்று கூறத் தேவையில்லை.

சென்னைக்குச் செல்லும் ரயிலில்.
*20—1—'46.*

## X. சம்பூர்ண கிராம சேவைக் கங்கோத்ரி

[மோ. க. காந்தி]

இங்கே கல்வி கற்கும் நோக்கத்துடன் வந்திருப்பவர்களிடமிருந்து நான் அதிகம் எதிர்பார்க்கிறேன். நான் மட்டுமல்ல, இந்தத் திட்டத்தில் ருசியுள்ள மக்களும் எதிர்பார்க்கின்றனர். இந்தியாவிலுள்ள படித்த பலர் நமது வேலைத் திட்டத்தைக் குறை கூறவும் நிந்திக்கவும் செய்கிறார்கள்; சிலர் தத்துவ ரீதியாக இதை எதிர்க்கிறார்கள்; அவர்களுக்கு விடையளிக்க முடியுமாயினும், அவர்களைப்பற்றி இப்பொழுது ஏதும் சொல்ல விரும்பவில்லை. ஆனால், இதில் ருசிகொண்டு, தாமும் இதில் உதவ வேண்டுமென்று கருதுவோருடைய வார்த்தைக்குச் செவி சாய்த்தாக வேண்டும். இத்தகையோருடைய உள்ளத்தில் கதர், கிராமக் கைத் தொழில், கோசேவை, ஹரிஜனசேவை ஆகியவற்றைப்பற்றி மிகுந்த ஆசையிருக்கிறது. அவர்களது ஆசை நிறைவேறும் பொருட்டு நாம் ஆன முயற்சிகள் எல்லாம் செய்யவேண்டும். உதர போஷணத்திற்கான வழி தேடும் பொருட்டு நீங்கள் இங்கு வந்திருந்தால், இந்த ஆசை நிறைவேறாது.

சர்க்கார் பள்ளிகளுக்கு எத்தனையோ பேர் போகிறார்கள். அங்கே பட்டம் பெறுகிறார்கள். அந்தப் படிப்பினால் பணம் சம்பாதிக்கலாம், கீர்த்தி பெறலாம், குறைந்த பக்ஷம் சர்க்கார் ஆபீஸில் குமாஸ்தாவாக ஆவோம்; அதுவுமில்லையென்றால் பியூன், வேலையாவது கிடைக்காதா வென்று அவர்கள் நினைக்கிறார்கள். எப்பொழுதும், பியூனாகவே இருப்போமா? பிரமோஷன் ஏற்படும், 'கிம்பளம்' இருக்கவே இருக்கிறது. அதாவது சர்க்கார் உத்தியோகம் கிட்ட வேண்டியதுதான், வாழ்க்கை சுகமாகிவிடுமென்பது கருத்து. இது ஓர் கவனிக்க வேண்டிய விஷயம். சர்க்கார் தம் பள்ளிக்கூடங்களில் பல வசதிகள் அமைத்திருக்கிறது. பெரிய கட்டடங்கள், பெருத்த உதவிச் சம்பளங்கள், வெளி தேசங்களுக்குப்போக உதவி முதலியன தருகிறது. அதனுடன் நாம் போட்டியிட முடியுமா?

இந்தப் பிரசினையை விளக்குவதற்கு நான் முன்னரே பல வழிகளைக் காட்டியிருக்கிறேன். நீங்கள் இங்கு வசதிகள் கிடைக்குமென்றோ, சம்

பள ஆசையினுலோ வரவில்லே. உங்களுடைய லட்சியம் நிறைவேற வேண்டுமானல் நீங்கள் இங்கு வந்திருப்பது கைத்தொழில்கள் கற்பதற்கு மட்டுமல்லவென்பதை நினைவிலிருத்த வேண்டும் கைத்தொழில்கள் பயில வேண்டியதே, ஆனல் அத்துடன் 'திருப்தியுறக்கூடாது. கிராமங்களில் வேண்டிய தொழிலாளிகள் இருக்கிருர்கள். அவர்கள் பாம்பரையாக இதே புரிந்து கொண்டிருப்பவர்கள். அவர்களுடன் நீங்கள் எப்படிப் போட்டியிட முடியும்? தொழில் முறை கற்பதுடன், அதைப்பற்றிய சாஸ்திர அறிவும் பெறவேண்டும். நாம் இதைச் செய்வது ஏன் என்ற கேள்வி அடிக்கடி கேட்க வேண்டும். எப்படிச் செய்வது? சுயராஜ்யத் துடன் இதற்குத் தொடர்புண்டாக்குவது எப்படி? அஹிம்சையைக் கொண்டு சுயராஜ்யம் பெறவேண்டும். இந்தியக் கிராமங்களில் கோடிக் கணக்கான மக்கள் உண்டு, அவர்களைக் கைதூக்கி விடவேண்டும், அவர் களுக்கு ஊழியம் புரிய வேண்டும், அவர்களுக்கு இதன் மதிப்பை உணர்த்த வேண்டும். மில்காரர்கள் மக்களுக்கு நிரம்பத் தருகிருர் என்று நினைத்து அதைக்கண்டு நீங்கள் திருப்தியுறுவதானல், இங்கே நீங்கள் படித்தலே கூடாது. மில்காரர்கள் ஒரு சிலருக்குத்தான் தாமுடியும், கோடிக் கணக்கானவர்களைப்பற்றி மில்காரன் நினைப்பதேயில்லே. மில்லைக் கொண்டு என்னல் கோடிக் கணக்கானவர்களுக்கு வேலே தாமுடியும் என்று கூறும் மில்காரர் எவரையும் நான் இதுவரையில் காணவில்லே.

நீங்கள் எத்தனே பெரிய வேலையைச் செய்ய வந்திருக்கிறீர்கள்! கோடிக் கணக்கானவர்களுக்குச் சேவை புரிய வேண்டும். 61 பேர் இருக் கிறீர்கள் என்பது முக்கியமான விஷயமல்ல. சாஸ்திர அறிவுடன் சென்ருல் காரியம் நிறைவேறிவிடும். இந்த 61 பேரும் கோடிக் கணக் கானவர்களின் காப்பாளர் அல்லது டிரஸ்டிகள் ஆகவேண்டும். இது தொடர்ந்து நடைபெறுமானல், உங்கள் தொகை பெருகிக்கொண்டே யிருக்கும். இந்த வித்யாலயம் கங்கோத்ரியை யொத்தது. பின்னர் கங் கையைப்போல், இதன் உருவம் பெருகிக்கொண்டே யிருக்கும். இது எனது கனவு. 25 வருஷங்களாக நான இதைக் கண்டுகொண்டே யிருக் கிறேன். நான் எதிர்பார்த்தது ஈடேறவில்லே, ஆயினும் ஏமாற்றமெய் தினேனில்லே; ஏனெனில் நான் ஏமாற்றமே அடைவதில்லே. பெரிய வேலே கள் நினைத்த மாத்திரத்தில் ஈடேறமாட்டா, அஹிம்சை மெள்ள மெள்ளச் சென்ருலும், தவருமல் செல்லும் தன்மையது, அதன் போக்கு நோனது. விமான வேகத்தில் செல்வோரையும் அது பின்னடையச் செய்துவிடும், இதில் எனக்கு உறுதியுண்டு.

நீங்கள் இங்கே கற்கும் விஷயங்களைக் கிராமத்தாருக்குப் போதிக்க வேண்டும். அவர்களிடையே இதில் ருசியுண்டாக்க வேண்டும். ஆனால், இந்த வேலை சுலபமல்ல. நான் ஸேவா கிராமத்தில் பல வருஷங்களாக இருக்கிறேன். இங்கே சர்க்கா சங்கம், கிராமக் கைத்தொழிற் சங்கம் கோஸேவைச் சங்கம் ஆகியவற்றின் தலைமைக் காரியாலயங்கள் உண்டு. இங்கே நல்ல ஊழியர்கள் உண்டு. பிறவிடங்களில் கிட்டாத வசதிகள் இங்கே கிடைக்கின்றன. இவ்வளவிருந்தும் நான் செய்ய விரும்பியதைச் செய்ய இயலவில்லை. இதைக்கண்டு உங்கள் உத்ஸாகம் குன்றலாகாது. எங்களால் ஏன் செய்ய வியலவில்லை என்ற கேள்வி உங்கள் மனத்தில் எழ வேண்டும், ஆசிரியர்கள் இதற்குப் பதில் அளிக்க ஆயத்தமாயிருக்கவேண்டும். இங்கே வந்து அமர்ந்திருப்பவர் ஏமாற்றி மோசம் செய்ய வரவில்லை. எப்பொழுதாவது ஒரு சமயத்தில் இதன் ரஹஸியம் கைக்கு வரலாம் என்ற உறுதியான நம்பிக்கையுடனேயே இருக்கிறார்கள். சேவா கிராமத்தைப் பன்மடங்கு பெருக்கிப் பார்க்க வேண்டும். ஒரு கிராமத்தை மட்டும் எண்ணிக் கொண்டிருக்கலாகாது. இந்தியாவைப்பற்றி முழு உலகைப்பற்றிக்கூட நான் சிந்திக்கிறேன். ஸேவா கிராமம் ஒன்றை மட்டும் கருதுவதென்றால், சத்தியம் அஹிம்சை ஆகியவற்றைப் பொருட்படுத்த வேண்டியதில்லையென்றால், நாம் செய்து முடித்திருப்போம்; ஆனால் இதனால் உலகின் துன்பம் குறைந்திராது. உலகில் இந்தியா ஒரு துளி போன்றது. ஸேவாகிராமமோ அந்தத் துளியுள்ளடங்கிய சிறு துளியே. ஸேவா கிராமத்தில் நடைபெறக் கூடியது உலகத்தில் எங்கு வேண்டுமானாலும் நடைபெறலாகும். இதன் பொருட்டு 100 ஆண்டுகள் வேண்டுமானாலும் செலவிட நான் சித்தமாயிருக்கிறேன்.

நீங்கள் திருப்தியுடன் கற்கச் சித்தமாயிருந்தால் என்னிடம் உள்ளதைக் கற்பிப்பேன்; ஆனால் அது பணம் சம்பாதிக்க உதவாது. நானும் நினைத்தால் ஆயிரம் இரண்டாயிரம் சம்பாதிக்க முடியும். தென் ஆபிரிக்காவில் 20 வருஷம் இருந்திருக்கிறேன். ஏதோ உளறிக் குளறி ஆங்கிலமும் பேச முடியும். இப்பொழுதோ 'மகாத்மா'வாக வேறு ஆகிவிட்டேன். இதனால் எனக்கு ரூ. 2,000 யாரும் கொடுப்பார்கள். ஆனால் நான் இதை விரும்பவில்லை. இதனாலேயே நான் கோடிக் கணக்காக சேர்க்க முடிகிறது; ஆனால் வீட்டில் வைத்துப் பூட்டவல்ல; எனக்கு ரொட்டியைத் தவிர வேறு எதுவும் தேவையில்லை. இதைப்போன்றே நீங்களும் உலர்ந்த ரொட்டியுடன் திருப்தியுறவேண்டும். இவ்விடத்திய வேலை சுலபமல்ல. இதில் உங்களுக்கு திருப்தியில்லையேல், நீங்கள் இங்கிருந்து போய்விட

வேண்டும். வேறு இடத்தில் உங்களுக்கு வேண்டிய பணம் கிடைக்க லாம். இங்கு இருப்பதானால் திருப்தியுடன் இருக்க வேண்டும். நான் கோடிக் கணக்கான மக்களைச் சேர்ந்தவன் என்ற எண்ணம் கொள்ளு வீராயின் உண்மையொளி பெறுவீர்.

நீங்கள் வெவ்வேறு மாகாணங்களிலிருந்து வந்திருக்கிறீர்கள். ஒரே போஜனசாலையில் உண்டு ஒருமிக்க வாழ்கிறீர்கள். உங்கள் உள்ளம் தூய்மைபெற வேண்டும். நாம் யாவரும் ஒன்றே. நாம் யாவரும் ஹரி ஜனங்கள், அவர்களிலும் 'பங்கி' (தோட்டிகள்) என்று நான் இப் பொழுது சொல்லிவருகிறேன், உங்கள் மனம் இவ்வாறு பக்குவம் எய்தி னால்தான் வேலை நடைபெறும். ஒவ்வொரு நிமிஷமும் விழிப்புடன் நீங்கள் வேலை செய்ய வேண்டும். உங்களுக்குப் பரீட்சை நடைபெறும், அத்தாட் சிப் பத்திரம் கிடைக்கும். ஆனால் உங்கள் மதிப்பு அதனாலெல்லாம் வெளி யாகாது. அத்தாட்சிப் பத்திரம் பிறருக்குக் காட்டுவதற்கல்ல. நீங்கள் எவ்வளவு தூரம் முன்னேறி யிருக்கிறீர்கள் என்பது அதிலிருந்து உங்க ளுக்கு விளங்கும். அதிலிருந்து மேலே போக வேண்டும். நீங்கள் புரி யும் வேலையிலிருந்து உங்கள் யோக்கியதை புலனாகுமேயன்றி, அத்தாட்சிப் பத்திரத்தைக் காட்டுவதாலல்ல. பிறவிடங்களில் அத்தாட்சிப் பத்திரங் களுக்கு மதிப்புண்டு, ஆனால் நாமோ வழங்கும் மதிப்பை மாற்ற வேண் டும், வாழ்வின் நோக்கை மாற்றவேண்டும். பொருள்களை நோக்கும் முறையையே மாற்ற வேண்டும்.

ஸேவா கிராமம்.
22—11—45.

(சம்பூர்ண கிராம சேவை வித்யாலயத்தின் மாணவர்கள் முன்னிலை யில் ஆற்றிய சொற்பொழிவு).

## XI. வினு—விடை

(மோ. க. காந்தி)

வினு :—நிர்மாண வேலையின் நோக்கம் மக்களை அஹிம்சை ஆட்சிக்கு ஆயத்தம் செய்வதென்று கூறப்படுகிறது. இந்த வியாக்யானம் சரியென்று மதிக்கலாமா? அல்லது "ஒரு மனிதன் மற்ருெரு மனிதனுடைய உழைப்பினுல் நியாயத்திற்குப் பொருந்தாத வகையில் பயன் பெற வழியில்லாத சமூக அமைப்பிற்கும் ஆட்சிக்கும்'' என்ற வியாக்யானம் சரியா?

விடை :—உங்களுடைய வியாக்யானம் சரியே; ஆனுல் அபூர்ணமானது. எப்படி என்பது உங்களுடைய இரண்டாவது வினுவிற்கு விடை தரும்பொழுது கூறப்படும்.

வினு :—இந்த வியாக்யானம் சரியென்ருல், இந்தச் சமூக அமைப்பும், ராஜ்ய நிர்மாணமும், இயந்திர சக்தியைப் பெருத்த அளவில் உபயோகித்தும் செய்ய முடியும் என்று தோன்றுகிறது. ஆனுல் அஹிம்சை ராஜ்யத்திற்கு பெருத்த அளவில் கையால் புரியும் தொழில் இன்றியமையாததா? ஆம், என்ருல் எப்படி?

விடை :—அஹிம்சையைப் பாகுபாடு செய்ய வியலாது. அஹிம்சை மனித ஜாதியின் பொதுக் குணம்; அல்லது மனிதன் விழிப்புடன் இருக்கையில் அவனது குணமாக இருத்தல் வேண்டும் என்று சொல்லுவோம். அஹிம்சைப் பற்றுடன் இருத்தலே, மனிதனுடைய விழிப்பிற்குப் பெரிய அறி குறியாகும். அஹிம்சையை இவ்வாறு நோக்குமிடத்து, நமது தேவைகளை நமது கைகளாலேயே பூர்த்தி செய்து கொள்ள வேண்டுமென்று தோன்றுகிறது. இவ்வாறு செய்யாவிடில், இதற்காகப் பிற சக்திகளை அண்டி வாழ நேரிடும்; இத்தகைய நிலையுள்ள வரையில், நாம் அச்சமின்றி வாழ வியலாது. இரண்டாவது பயம் ஒன்று உண்டு. நாம் பெருவாரியாக இயந்திரங்களை உபயோகிப்போமானுல் அவற்றைக் காக்கும்பொருட்டு பெருத்த முயற்சி செய்யவேண்டி இருக்கும். இன்று உலகில் நடைபெறுவதுபோல, சேனை வைத்துக்கொள்ள நேரும். விஷயம் என்னவெனில், வெளியிலிருந்து படை யெடுப்பு பயம் நமக்கில்லை யெனினும், உள்ளே பெரிய இயந்திரங்கள் வைத்திருப்போருக்கு

அடிமைகளாகவே வாழ நேரிடும். அணுகுண்டை யெடுத்துக்கொள்வோம். எவரிடம் அணுகுண்டு இருக்கிறதோ அவரைக் கண்டு இன்று அவருடைய நண்பர்களும் அஞ்சுகிறார்கள். தத்வ முறை நம்மை இயந்திரத் தொழிலினின்றும் தப்புவிக்கிறது.

வினு :—நூல் நூற்பதற்குக் கூறப்படும் காரணங்களில் ஒன்று அதனால் மனிதன் சுய தேவையைத் தானே பூர்த்திசெய்து கொள்ளுகிறான் என்பது. இவ்வகையில் பிறரை அண்டியுள்ளவரைவிடத் தன் தேவையைத் தானே தீர்த்துக்கொள்வோன் சமூகத்திற்கு அதிகச் சேவை புரியக்கூடுமா? சுய தேவையைத் தானே தீர்ப்பதற்கும், சமூக சேவைக்கும் சம்பந்தம் உண்டென்பதும், ஒருவன் எந்த அளவிற்குச் சுய தேவையைப் பூர்த்தி செய்ய வியலுமோ, அந்த அளவிற்குச் சமூக சேவைபுரிய வியலு மென்பதும் உங்கள் அபிப்பிராயமா?

விடை :—இந்தச் சந்தேகத்தைப் போக்குவதற்கும் அஹிம்சை நோக்கு கண் முன் இருக்கவேண்டும்; ஏனெனில் நான் கூறிய வியாக்யானம் சத்தியம்—அஹிம்சையை ஆதாரமாகக் கொண்டது. நமது முதல் கடமை நாம் சமூகத்திற்குப் பாரமாக இருத்தல் கூடாது என்பது; தம் தேவைகளைத் தாமே பூர்த்தி செய்துகொள்ள வேண்டுமென்பது. தம் தேவையைத் தாமே பூர்த்தி செய்வதிலேயே ஓர்வகை சேவை அடங்கியுள்ளது. இந்த நோக்குடன் நாம் நம் தேவையைப் பூர்த்தி செய்துகொண்டால், சேவைக்காக எஞ்சும் நேரத்தில் சமூகத்திற்குச் சேவை புரிவோம். எல்லோரும் தம் தம் தேவைகளைத் தாமே பூர்த்தி செய்துகொண்டார்கள் என்று வைத்துக் கொண்டால், யாருக்கும் எவ்வகைக் கஷ்டமும் இராது. அந்த நிலைமையில் யாருக்கும் சேவை செய்யவேண்டியே இராது. ஆனால் நாம் இன்னும் அவ்வளவு தூரம் போய்ச் சேரவில்லை. அதனாலேயே சமூக சேவை யென்ற பேச்செழுகிறது. சுய தேவைகளைத் தாமே பூர்த்தி செய்தல் என்பதை அதன் கடைசி நிலைக்குக் கொண்டுபோனாலும், மனிதன் சமூகத்தின் அங்கமாகையால், சமூகத்தினின்றும் அவன் ஏதாவது உதவிபெறத்தான் நேரும். அதாவது எந்த அளவிற்கு மனிதன் தன் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளுகிறானோ, அந்த அளவிற்கு பிறரை அண்டினவனாயுமுள்ளான். சமூகத்தைச் சரியான நிலையில் நிறுத்தும் பொருட்டு, பிறரை நாடவேண்டி யிருக்கும்பொழுது, அதை பிறரை நாடுதல் என்று அழைக்காமல், கூட்டுறவு என்று கூறுகிறோம். கூட்டுறவில் ஓர் மணமுண்டு; கூடி உழைப்போரிடையே ஒருவன் பலவான், மற்றொருவன் எளியோன் என்ற வேற்றுமைகள் கிடையா. யாவரும் சரி, நிகர், சமான

மாவர். பிறரை அண்டி யிருப்பதில் அங்கஹீனத் தன்மையுண்டு. ஒரே குடும்பத்திலுள்ளவர்கள் தம் தேவையைப் பூர்த்தி செய்துகொண்டு வாழ்வதுபோலவே, பிறர் உதவியை நாடியும் வாழ்கிறுர்கள். ஆனல் 'எனது, உனது' என்ற எண்ணம் குடும்பத்தில் கிடையாது. இதனல் அவர்கள் யாவரும் உதவியாளர் – (கூட்டு) உறவினர் ஆகிவிடுகின்றனர். அவ்வாறே, சமூகம், நாடு அல்லது மனித ஜாதியையே ஓர் குடும்பம் என்று கருதுவோமாயின் எல்லா மனிதரும் (கூட்டு) உறவினர் ஆகின்றனர். இத்தகைய கூட்டுறவின் தன்மையை மனக் கண்ணல் நினைத்துப் பார்ப்போமானல், உயிரற்ற இயந்திரங்களின் உதவியே தேவையில்லையென்பதும் இயந்திரங்களின் உதவி சிறிதளவு தேவையா யிருக்குமே யல்லாது பெருவாரியாக வல்லவென்றும், அதிலேயே சமூகம் நல்ல தற்காப்புடன் இருக்கும் என்பதும் தெரியும்.

வினு :— இவ்வாறு இருக்குமானல் நீங்கள் பயிர்த் தொழிலைவிட நூற்றலை அதிகமாக வற்புறுத்துவற்கு ராஜீயக் காரணம் உண்டா? அல்லது நூற்றலைப் போல் மக்கள் சுலபமாகப் பயிர்த் தொழில் புரிய வியலாதென்பதா?

விடை:— எனக்கு ராஜீயம், சமூகம், பொருளாதாரம் என்ற பாகுபாடுகள் அவசியமில்லை. எதில் ராஜீயம் உண்டோ, அதில் சமூகப் பிரசினையும் இருக்கிறது, பொருளாதாரத் தத்துவமும் உண்டு. ஒன்றில் மற்றவையும் வரத்தான் வருகின்றன. புரிந்துகொள்ளவே நாம் பாகுபாடு செய்கிறோம், செய்யவேண்டியிருக்கிறது. பயிர்த் தொழிலை நான் வற்புறுத்தாமைக்கு முக்கியமான காரணம் எனக்கு பயிர்த் தொழிலைப் பற்றி ஒன்றுமே தெரியாதிருப்பதே யாகும். ஆகையால் அதற்கு நான் மதிப்பு அளித்தாலும், அதைப் பற்றி என்ன சொல்வேன்? சர்க்காவைப் பற்றியோ வெனில் அவ்வாறல்ல. அதைப் பற்றி எனக்குப் போதுமான ஞானம் உண்டு. இரண்டாவது காரணம், வெளிநாட்டாரின் ஆதிக்கம் பரவியதால் சர்க்கா அழிந்தது, அழிக்கப்பட்டது. பயிர்த் தொழிலை அழிப்பதென்பது முடியாது. ஆனல் மக்களின் அடிமைத்தனம் பெருகும் வகையில் பயிர்த் தொழில் மாறிவிட்டது. சர்க்காவை வற்புறுத்துவதற்கு மூன்ருவது காரணம், கைகளின் ஆற்றல் பயிர்த் தொழிலில் குறைந்த அளவில்தான் வெளிப்படுகிறது என்பது. கதர் தயாரிப்பதிலும் அது சம்பந்தமான பல்வேறு கிரியைகளிலும் கைகளும் விரல்களும் உபயோகப்படுகிற அளவிற்கு வேறு எந்தத் தொழிலிலும் உபயோகப் படவில்லை யெனலாம்.

நான்காவது காரணம், விதேசிகள் முதன் முதலில் பூமியைத்தான் கைப்பற்றுகிறார்கள்; பூமியின் மூலமாக மற்றவைகளைப் பிடுங்கிக் கொள்கிறார்கள். ஆகையால் நிலச் சீர்திருத்தம் செய்யவேண்டுமானால் சர்க்காரின் உதவி மிகவும் இன்றியமையாததாகும். இந்த எல்லாக் காரணங்களுக்காகவும், இவை போன்ற பிற காரணங்களுக்காகவும், நூற்றல் வற்புறுத்தப்பட்டது.

வினா:— மனித சமூகத்தின் வெளிப்படையான முன்னேற்றத்தின் ஒரு அறிகுறி,—தன் தேவைகளைத் தானே பூர்த்தி செய்து கொண்டிருந்த மனிதன் இப்பொழுது நாளுக்கு நாள் பிறர் உதவியை அதிகமாக நாடுகிறான் என்று தோன்றுகிறது. இந்தப் போக்கு சரியல்ல, கடைசியில் இதற்கு எதிரிடையான போக்கு மீண்டும் மேலோங்கும் என்பதும் உங்கள் கருத்தா?

விடை:— சமூகம் இயந்திரங்களை நாடிச் செல்கிறது என்பது இந்தக் கேள்வியின் கருத்து என்று நினைக்கிறேன். நான் புரிந்துகொண்டது சரியானால், சமூகம் இயந்திரத்தின் அடிமை வாழ்வினின்றும் விடுபட வேண்டியதே என்பது என் பதிலாகும். ஏனெனில் இயந்திரங்களுக்கு அடிமை புரிவதால் நமது இந்திரியங்களும், மனமும் பெரிதும் அடிமையுறுகின்றன.

வினா:—வெறும் பிரசாரத்தினாலேயே உங்கள் ஆயுளில், நிர்மாண வேலைகள் வெற்றி பெறும் என்று நம்புகிறீர்களா? மனிதனுக்கு இயற்கையான (காமம், கோபம், பேராசை, மயக்கம், மமதை, பொறாமை) துர்க்குணங்களைக் கவனிக்குமிடத்து அதுவும் இந்த இயந்திர யுகத்தில், நிர்மாண வேலைகள் பெருத்த அளவில் மக்களிடையே நடைபெற வேண்டுமானால் பிரசாரத்துடன் கூட, சட்டத்தின் உதவியும் தேவையென்று தோன்றவில்லையா? இத்தகைய உதவி மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகளிடமிருந்து பெறுவதால் அஹிம்சைத் தத்துவத்திற்குக் குந்தகம் விளையுமா? விளையுமானால், எவ்வாறு?

விடை:— நமது நிபந்தனைகளையொட்டி நாம் சர்க்காரிடம் உதவி பெற வேண்டியதேயென்று நான் பல தடவைகளில் கூறியிருக்கிறேன்; அதுமட்டுமல்ல அகில உலகின் உதவியும் பெறவேண்டியதே. சட்ட சபைகளிலிருந்து நமக்கு நிர்மாண வேலைக்கு மிகவும் குறைந்த உதவியே கிட்டும் என்று நான் ஒரு காலத்தில் எண்ணியதுண்டு. ஆனால் சட்ட சபைகளில் மக்களின் பிரதிநிதிகள் இருந்தால், நிர்மாண வேலைகளுக்கு

அதன் மூலமாக உதவி கிடைக்குமென்று இப்பொழுது உணர்ந்து கொண்டேன். பிரதிகூலமான சந்தர்ப்பங்களிலும் நாம் நிர்மாண வேலைகளை நிறைவேற்றக்கூட வில்லையேல், அதன் மதிப்பை உணர்ந்தவராக மாட்டோம் என்பதையும் இத்துடன் மனதிலிறுத்தவேண்டும்; உலகம் அறியவியலாது. நிர்மாண வேலைகளில் நாம் எந்த அளவிற்கு முன்னேறியிருக்கிறோமோ அந்த அளவிற்கு மக்களின் ஆற்றல் பெருகியிருக்கிறது என்று நான் நடுநிலையிலிருந்து கொண்டு அனுபவத்திலிருந்து கூறக்கூடும். நிர்மாண வேலைகளை யாவரையும் ஏற்கச் செய்து மக்களைக் கொண்டு அவற்றை நிறைவேற்றச் செய்தோமாயின், சுயராஜ்யம் நம் கையிலேயே இருக்கிறது என்று கூறலாம்.

ஸேவா கிராமம் 29—11—45.

## XII. டிரஸ்டி போர்டின் கூட்டம்

### சில தீர்மானங்கள்

(27, 28—11—'45 இல் நடந்த மேற்படிக் கூட்டத்தில் நிறைவேறியவை.)

(1) நூல் நிபந்தனையைப்பற்றி

சர்க்கா சங்கம், கதர் வாங்குவதற்கு நூல் நிபந்தனை யேற்பட்டதால் சிறிது சிரமமுண்டாயினும், கதர் அன்பர்கள் சர்க்கா சங்கத்தின் மூலத் தத்துவத்தை நிறைவேற்றுவதில் ஒத்துழைக்க முயற்சி செய்து, அதன் மூலமாக நூற்புவேலையை விருத்தி செய்வதில் உதவி செய்து வருவதற்காக அவர்களுக்கு நன்றி செலுத்துகிறது. இப்பொழுது ஒரு ரூபாய் மதிப் புள்ள கதருக்குக் குறைந்தது அரை அணு நூல் வாங்குவது விதியாகும். இது மிகவும் குறைவு, இதை அதிகரிக்க வேண்டும். நூலின் அளவை ஒரே மூச்சில் அதிகமாக்குவதால் கதர் உபயோகிப்போருக்குக் கஷ்ட முண்டாகுமென்பதையும் சங்கம் உணருகிறது. ஆகையால் சிறிது சிறி தாகப் பெருக்குவது நலமாகும். அதைத் தவிர ரூபாய்க்கு அரையணு நூல் என்பதைவிட, நூலின் குறிப்புள்ள ஓர் அளவை வைத்தால் அதிக அனுகூலமுள்ளதாகும். எல்லா விஷயங்களையும் சிந்தித்ததன் பயனாக சர்க்கா சங்கத்தின் டிரஸ்டி மண்டலத்தின் இக்கூட்டம் நிச்சயிப்பது என்னவெனில் 1—1—1946 விருந்து ஒரு ரூபாய்க்குக் கதர் விற்கும் பொழுது விலையின் பகுதியாக 160 சுற்றுள்ள ஒரு 'லடி' (இரண்டு குஞ் சம்) நல்ல நூலாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும், இந்த நூலின் அளவு 1—7—46 விருந்து இருமடங்காக்கப்பட வேண்டும். தொப்பி முதலான சில்லறை சாமான்கள் வாங்குகிறவர்களுக்குத் தொந்தரவு உண்டாகா திருக்கும் பொருட்டு, ஒரு ரூபாய்க்குக் குறைந்த கதரோ, கதரால் செய்யப்பட்ட ஏதேனும் பொருளோ வாங்குவோரை நூல் நிபந் தனை கட்டுப்படுத்தாது என்றும் தீர்மானிக்கிறது.

இதைப்பற்றிச் சர்க்கா சங்கத்தின் 1944—டிஸம்பர் கூட்டத்தில் நிறை வேறிய தீர்மானத்தில், 'கதரின் கிரயத்தின் பகுதியாகத் தரப்படும் நூல், தானே நூற்றதாகவோ, குடும்பத்தினர் நூற்றதாகவோ, நண்பர்கள் அல்லது அயலார் நூற்றதாகவோ இருக்க வேண்டுமென்று 'கண்டிருக் கிறது. 'அயலார்' என்றதற்கு அக்கம் பக்கத்தில் கூலி கொடுத்து நூற்கச் செய்ததென்றும் பொருள் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனல்,

இத்தகைய நூலைத் தருவதால் சர்க்கா சங்கத்தின் நோக்கம் நிறைவேருது என்று இப்பொழுது யோசித்ததில் தெரிகிறது. ஆகையால் கூலி கொடுத்து வாங்கிய நூலைக் கதரின் கிரயத்திற்குக் கொடுத்தல் உசிதமல்ல; ஆனுல் மாதச் சம்பளம் தந்து வைத்திருக்கும் தம் வேலையாட்கள் நூற்கும் நூலைத்தரலாம். ஆகையால், அந்த மூலத் தீர்மானத்தில் கண்ட 'அயலார்' என்பதற்கு பதிலாக 'வேலைக்காரர்கள்' என்ற சொற்கள் இருக்க வேண்டும்.

(2) சங்கத்தின் உதவியாளர், சுயதேவைப் பூர்த்தி செய்வோர் ஆகியோரின் தொகையைப் பெருக்குதல்

சர்க்கா சங்கத்தின் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமாயின், உடை விஷயத்தில் சுயதேவைப் பூர்த்தி செய்வோர், சங்கத்தின் அமைப்பின் 18-வது பிரிவின்படி சாதாரண உதவியாளர், ஆகியோரின் தொகையைப் பெருக்க வேண்டும். வழக்கமாக முழுமையும் கதர் உடுத்துவதுடன் எவர் அசெளக்கியமாகவோ, வேறு தவிர்க்கவியலாத காரணங்களினுலோ அசாத்தியமானுலொழிய, மற்றக் காலங்களிலெல்லாம் மாதத்தில் குறைந்தது நூற்புமட்டும் செய்தால் $7\frac{1}{2}$ சிட்டங்களும் சம்பூர்ண நூற்புச் செய்தால் 5 சிட்டங்களும் நூற்கிருரோ, அவரே சுயதேவைப் பூர்த்தி செய்வோராவர். சாதாரண உதவியாளர், வழக்கமாக கதர் உடுத்துவதுடன் சர்க்கா சங்கத்திற்கு வருஷத்தில் குறைந்தது 6 சிட்டம் தாமே நூற்ற நூலாகத் தருபவர்.

சர்க்கா சங்கத்தின் டிரஸ்டி மண்டலத்தின் இக்கூட்டம், சங்கத்தின் கிளைகள், கதர் அன்பர்கள் ஆகியோரிடம், அவர்கள் கூடியவரை முயற்சி செய்துவருகிற 78-வது சர்க்கா ஜயந்திக்குள்ளாக மேலே குறிப்பிட்டபடி குறைந்தது 78,000 சாதாரண உதவியாளரை (இத் தொகையில் பாதியாவது சுயதேவைப் பூர்த்தி செய்வோ ரிருக்கவேண்டும்) சேர்க்கும்படிக் கேட்டுக்கொள்கிறது.

இந்த வேலைத்திட்டம் நிறைவேற வேண்டுமெனில் சங்கத்தின் கிளைகளைத் தவிர மற்ற ஸ்தாபனங்களும் அன்பர்களும் உதவவேண்டியது அவசியமாகும். இதற்குத் தேவையான பூர்வாங்க வேலைகளுக்குச் சிறிது பொருட்செலவு ஆகும். அதற்கான உதவியளிக்கும் நோக்குடன், எந்த ஸ்தாபனம் அல்லது நபர் இவ்விஷயமாக விண்ணப்பம் செய்து கொண்டாலும், பொருள் நிர்வாக சபை ஓர் வரம்புக்குள்ளாக உதவிபுரிய வேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது. இவ்வுதவியின் அளவை நிர்

ணயிக்கையில் கூலிக்காக நூற்கும் சுயதேவைப் பூர்த்திசெய்வோருக்கும், கூலிக்காக வல்லாமல் சுயதேவைக்கெனவே நூற்போருக்கும் தரவேண்டிய உதவிகளைச் சிந்தித்துத் தரவேண்டும். மேற்கூறிய உதவிபெறும் ஸ்தாபனங்களுக்கும் சரி, நபர்களுக்கும் சரி, அவர்கள் சுய தேவைக்கென நூற்ற நூலை நெய்விக்கவும் வசதி செய்து தர வேண்டும்.

(3) சங்கத்தின் அங்கத்தினரின் நூல் சந்தாவின் அளவு

சங்கத்தின் அமைப்பின் 18 (1) (c) இல் உள்ள "1,000களும்" என்ற சொற்களுக்கு பதிலாக "நான்கு அடி சுற்றளவுள்ள 320 இழைகள் அல்லது அரைச் சிட்டம்" என்ற சொற்கள் இருக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

(4) பிற மாகாணங்களுக்குச் சரக்கு அனுப்புவது

இதுவரையில் கிளைகள் பிற மாகாணங்களுக்குச் சரக்கு விற்று வந்தன; அந்த விற்பனைகளில் ரூபாய்க்கு அரையணு கமிஷன் கொடுத்து வந்தன. இனி வெளியே துணி அனுப்புவதற்கு ஊக்கமே அளிக்கப் படாதாகையர்ல் கமிஷனை நிறுத்துவதென்று முடிவு செய்யப்படுகிறது.

(குறிப்பு :—காஷ்மீர்க் கிளையின் முறை வேறு வகையாக இருப்பதால் இந்த விதியினின்றும் அக்கிளைக்கு விலக்கு அளிக்கப்படுகிறது).

ஒரு மாகாணத்தின் கதர் வேறு மாகாணத்திற்குப் போகலாகாதென்பதை இனி வற்புறுத்த வேண்டும். ஆகையால் குறிப்பிட்ட ஒரு பிற மாகாணத்திற்குச் சரக்கு அனுப்புவதா? இல்லையா? என்ற விஷயத்தை சங்கத்தின் பிரதானக் காரியாலயமே முடிவு செய்யும்; அதாவது பிற மாகாணங்களிலிருந்து ஓர் கிளையோ, அத்தாக்ஷிபெற்ற ஸ்தாபனமோ சரக்குக் கொள் முதல் செய்ய விரும்பினல், பிரதானக் காரியாலயத்திற்கு விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டும். பிரதானக் காரியாலயத்தின் அனுமதியின்றி, பிற மாகாணக் கிளைக்கோ, ஸ்தாபனத்திற்கோ சரக்கு அனுப்பலாகாதென்று தீர்மானிக்கிறது.

(குறிப்பு :—பம்பாய் வஸ்திராலயத்தின் விஷயத்தில் வேறு முறையைப் பின்பற்ற வேண்டும். இதைப்பற்றி பிரதானக் காரியாலயம் பின்னர் அறிவிக்கும்).

(5) இயந்திர வில்

கதர்த் திட்டத்தில் பஞ்சு வெட்டும், இயந்திரத்திற்கு எத்தகைய இடம் இருத்தல் வேண்டுமென்பதைப்பற்றி ஆலோசித்ததில், அதற்கு ஆதர

வளிப்பது உசிதமல்லவென்று தீர்மானமாயிற்று. இந்த இயந்திரம் உபயோகிக்கப்படும் இடங்களில் சிறிது சிறிதாக அதை உபயோகிப்பதைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.

### (6) 'பானிபட்' கம்பளம்

சந்தையில் கொள் முதல் செய்யப்படும் 'பானிபட்' கம்பளத்தைப் பற்றி ஆலோசிக்கப் பட்டது. அந்தக் கம்பளங்களை சங்கத்தின் விதிகளின்படி உற்பத்தி செய்வது சாத்தியமல்லவென்று தெரிகிறது. ஆகையால் அவற்றைச் சுத்தமான கதர் என்று கருதுவதோ, வாங்கி விற்பதோ கூடாது.

### (7) அத்தாக்ஷியளித்தல்

ஸ்தாபனங்களுக்கு அத்தாக்ஷியளிக்கு முன்னர், கிளைகள் தலைமைக் காரியாலயத்தின் அனுமதி பெறவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

113712

# எங்களிடம் கிடைக்கும் மற்ற பிரசுரங்கள்

| | | Price | Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|
| 1. | Bee Keeping (English) | ... | 1 | 8 | 0 |
| 2. | Rice | ... | 0 | 12 | 0 |
| 3. | Oil Extraction | ... | 1 | 8 | 0 |
| 4. | Magandipa | ... | 0 | 5 | 0 |
| 5. | The Oil Mill vs. ghani | ... | 0 | 2 | 0 |
| 6. | Paper Making | ... | 2 | 8 | 0 |
| 7. | Dead animal to taned leather | ... | 0 | 12 | 0 |
| 8. | Rural economic survey questionaire. | | 0 | 3 | 0 |
| 9. | The Cow in India Part I & II | ... | 16 | 0 | 0 |
| 10. | Home & Village Doctor | ... | 10 | 0 | 0 |
| 11. | The Romance of Bee keeping | ... | 7 | 0 | 0 |

3-5-96

23A
4-91

# எங்களிடம் கிடைக்கும் பிரசுரங்கள்

| | | விலை ரூ. அ. பை. |
|---|---|---|
| 1. | கதர் திட்டத்தின் புதிய அமைப்பு .... | 0 2 0 |
| 2. | கதர் இயக்கமும் புதிய திட்டமும் .... | 0 2 0 |
| 3. | புதிய திட்ட பிரசுரம் நெ. 4. .... | 0 2 0 |
| 4. | காந்திஜியின் மணி மொழிகள் .... | 0 4 0 |
| 5. | நூற்பு கணிதம் முதல் பாகம் .... | 0 4 0 |
| 6. | ,, இரண்டாம் பாகம் .... | 0 8 0 |
| 7. | ஸ்திரீகள் முன்னேற்றம் .... | 0 4 0 |
| 8. | தக்ளியில் எப்படி நூற்பது (ஆங்கிலம்) .... | 0 2 0 |
| 9. | மறந்தது .... | 0 3 0 |
| 10. | Swaraj through Charka (English) .... | 0 4 0 |
| 11. | Constructive Programme ,, .... | 0 6 0 |
| 12. | கரேலு கதாயி (ஹிந்தி) .... | 0 12 0 |
| 13. | நவ சம்ஸ்கான் ,, .... | 1 8 0 |
| 14. | ,, (தமிழ்) } புதிய கதர் இயக்கம் .... | 0 12 0 |
| 15. | காந்தீய நவநீதம் .... | 5 0 0 |

Printed by SHAKTI PRESS LTD. (Shanti Press) MADRAS 14.